# டி. ஐ. ஜி., அமைச்சு செயலாளர்நேற்று யாழ்.

பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

ஈழநாடு

The EELANADU

மலர்: 19 மாசி 20 ரபிஅல்: 12 இதழ்: 21

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 3-3 77

# திடீர் விஜயம்!

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஆனு செனிவரத்னவும், பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரச் செயலாளர். திரு. ஜெயசிங்காவும் நேற்று முற்பகல் விசேட விமான மூலம் யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு வந்தனர்.

யாழ். பொலிஸ் நிலையத்திற்கு சென்றபின் இவர்கள் யாழ். வளாகத்திற்குச் சென்று மாணவர்களைச் சந்தித்து உரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் சிலமணித்தியாலங்களைச் செலவிட்ட பின்னர் அவர்கள் நேற்று பகலே விமான மூலம் கொழும்பு திரும்பினர். (உ)

## அரியாலையில் வாலிபர் கொலை

யாழ்ப்பாணம், வியா

பொல்லால் தாக்கப்பட்டு மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் கோரமாகக் கொலை செய்யப்பட்டார்.

குஞ்சர் விபுலானந்தர் (வயது 26) என்பவரின் மர

(8-ம் பக்கம் பார்க்க)

# சிப்பாய்கள் அட்டகாசம்!

# கடைகள், டாக்சிகள் சேதம்!!

## யாழ் நகரில் நள்ளிரவில் நடந்த வெறியாட்டம்

### பாதசாரிகள் தாக்கப்பட்டனர்; 3 சிப்பாய்கள் பிணையில்!

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் நேற்று முன்தினமிரவு இராணுவ 'ட்ரக்' ஒன்றில் வந்ததாகக் கூறப்படும் சிவில் உடைச் சிப்பாய்கள் சிலர் நடத்திய திடீர் அட்டகாசத்தின்போது சில கடைகளும் பல டாக்சிகளும் சேதப்படுத்தப்பட்டன. சினிமாக் காட்சிகள் முடிந்து வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்த பொதுமக்கள் 'கிலி'கொண்டு ஓட்டம் பிடித்தனர். இதனல் யாழ் நகர் சிலமணிநேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

பாதசாரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பலர் காயமடைந்தனர். அத்துடன் சிப்பாய்ஒருவரும் பலமாகத் தாக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக நேற்று பதில்நீதவான் முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின்போது இராணுவ சிப்பாய் ஒருவர் அடையாளம் காட்டப்பட்டார்.

நேற்று முன்தினமிரவு சுமார் 12 மணியளவில் இச்சம்பவம் நடந்தது. அப்போது வீதியில் நிறுத்தப்பட்டிருந்த டாக்சிகள் மீது இக்கோஷ்டியினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 5 டாக்சிகள் பலத்த சேதத்துக்குள்ளானது. சில கடைகளும் அடித்து நொறுக்கப்பட்டன.

சுபாஸ் கபே, சில்வாவாச் வேக்ஸ், உடுப்பிலாட்ஜ் ஆகியவற்றின் மீது இக்கோஷ்டி திடீர் தாக்குதல் நடத்தியது. அங்கு ஒழி வீசிக்கொண்டிருந்த பெறுமதிவாய்ந்த மின்னெளி விளம்பரக் கண்ணுடிகள் அடித்து நொறுக்கப்பட்டன. பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் உள்ள 'ஓட்டல்' நிறுவன பெட்ரோல் நிலையத்தின்மீது நடாத்தப்பட்ட தாக்குதலின் போது பெட்ரோல் மீட்டர் சுக்குநூருகியது.

நேற்று முன்தினம் இரவு ஒன்பது மணியளவில் பஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## அடையாள அணிவகுப்பில் 34 பேர்!

யாழ்ப்பாணம், வியா.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு யாழ் நகரில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவர் நேற்று மாலை யாழ்ப்பாணம் பதில்நீதவான் திரு.சி. அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணப்பட்டார்.

மேற்படி அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக பொலிசார் பலாலி இராணுவமுகாமைச் சேர்ந்த கந்தகே பெஸில் கே. ஜே. அபயசிங்க, கே. ஜீ. பெரேரா என்னும் மூன்று சிப்பாய்களை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து பதில் நீதவான் திரு. அமிர்தலிங்கம் முன்னிலையில் அடையாள அணிவகுப்பின்போது ஆஜர் செய்தனர்.

சம்பவதினம் இரவு 9 மணியளவில் யாழ் மத்திய பஸ் நிலையத்திலிருந்து பலாலி ஊடாக கீரிமலை செல்லும் 764 இலக்க இ. போ. ச. பஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## மயக்கம் திரும்பாத நிலையில் வட்டு. வளாக மாணவர்கள்

யாழ்ப்பாணம், வியா

வட்டுக்கோட்டையில் நடந்த சம்பவத்தில் காயமடைந்த இரு வளாக மாணவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் கிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயமடைந்த இரு மாணவர்களும், யாழ்ப்பாண வளாக வட்டுக்கோட்டைப் பிரிவை சேர்ந்தவர்களாகும்.

நேற்று முன்தினம் இருவரும் வளாகத்திற்கு வெளியில் சென்று கொண்டிருந்த போது

(8-ம் பக்கம் பார்க்க)

## உள்ளே

3ம் பக்கம்
நெடுஞ்செழியனுக்கு எதிராகச் சிறை அதிகாரி நீதிமன்றத்தில் மனு!

5ம் பக்கம்
சங்கானைப் ப. நோ. கூ. சங்க ஊழியர் சத்தியாக்கிரகம்.

6ம் பக்கம்
சிறையில் மாண்ட தி. மு. க. எம்.. பி. சிட்டிபாபு எழுதிய டயறிக் குறிப்புகள்.

## நாளை

- செம்மணி துப்பாக்கிச் சூடு விசாரணைக் கடைசி விபரம்.
- கவிஞர் காசி ஆனந்தனுக்கு சுந்தரர் மீண்டும் கடிதம்.

## அடுத்த 6 வருடம் இந்த அரசு பதவியில் இருக்கும்

### பிரதமர் நம்பிக்கை

கொழும்பு. வியா

அடுத்த ஆறுவருடகாலத்துக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி நிச்சயம் பதவியில் இருக்கும் என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியிருக்கிறர்.

எவர் என்ன சொன்ன போதிலும், அரசைவிட்டு யார் வெளியேறினுலும் அடுத்தஆறு ஆண்டு காலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருக்கும் என்று அவர் சொன்னர்.

இதற்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசியல் வேறுபாடுகளை மறந்து சேவையாற்ற முன்வரவேண்டும்' என்றுர்.

ரொறிங்டன் சதுக்கத்தில் பொதுநிர்வாக அமைச்சுக்கான கட்டிடத்தை திறந்துவைத்து அமைச் பேசினர். (ஆ)

அமரரான

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின்

அந்தியேட்டி அழைப்பு

அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 5-3-77 சனிக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலையில் நடைபெறும். அந்தியேட்டிக்கிரியைகளிலும் அன்று நண்பகல்நடைபெறும் மாகேஸ்வர பூசையிலும் கலந்துகொள்ளுமாறு உற்றுர்,உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

திருமதி பொன்னம்பல மும் பிள்ளைகளும்.

5597

# சிப்பாய்களின் அட்டூழியம்' உடன்நடவடிக்கைஎடுங்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். மத்திய பஸ் நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நிகழ்ந்ததாகக் கூறப்படும் இராணுவ அட்டகாசங்கள் குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோப்பாய் எம். பி. சி. கதிரவேலுப்பிள்ளை பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைத் தந்தி மூலம் கோரியுள்ளார்.

இத்தந்தியில்அவர்கூறியிருப்பதாவது: கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் இராணுவ சிப்பாய்கள் கோஷ்டி ஒன்று யாழ். பஸ் நிலையத்தடியிலும், பஜாரிலும் புகுந்து அப்பாவிமக்களைத்தாக்கித்துன்புறுத்தியதுடன் கடைகளையும், மோட்டார் கார்களையும் உடைத்துச்சேதம் விளைவித்துள்ளது.

இந்தஅட்டூழியங்கள்குறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறுகேட்டுக்கொள்கிறேன்."

## யாழ்லயன் களியாட்டு விழா-77

### (யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக)

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக் கூப்பன்களை இணைச் செயலாளர் திரு. இ. ஆர். ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**கீழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.**

1977-ம் ஆண்டு பங்குனிமாதம் 19-20-ம் திகதிகளில் நடைபெறும் யாழ். லயன் கழக முதலாவது களியாட்டுவிழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளையாட்டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்கு பற்றித் தகுதியுடையேன் என்பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்கு பற்றுவ தன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப் பொறுப்பாளி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஏற்படும் எவ்விதமான காயம் அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகள் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் பொறுப்பாளிகளாகமாட்டார்கள் என்றும் அவர்களிடமிருந்து எந்தவிதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன். போட்டியில் நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே கூப்பன்களை போட்டியாளர்கள் அனுப்பவேண்டும்.

### போட்டி நிகழ்ச்சிகள்

[1] வர்த்தக ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி, [3] விவசாயஊர்திகள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, [5] அலங்கார பவனியில் விநோதஉடை தரித்தோர் காட்சிகள், [6] மாணவர் அணிவகுப்பும் 'பாண்ட்' வாத்தியப் போட்டியும், [7] 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விநோத உடைப்போட்டி, [8] 90 மைல் மரதன் சயிக்கிள் ஓட்டம் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை [9] 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 25 மைல் சைக்கிள் ஓட்டம், [10] 5 மைல் யுவதிகள் சைக்கிள் ஓட்டம், [11] 26 மைல் மரதன் வீதியோட்டம், [12] நீச்சல் போட்டி, [13] படகோட்டப்போட்டி, [14] கராட்டிப் போட்டி, [15] யாழ். ஆணழகன்போட்டி, [16] மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி. [17] யாழ்.அழகு ராணிப் போட்டி, [18[ வாண வேடிக்கை.

இந்த பதினேழு போட்டிகளிலும் கலந்துகொள்ளும்விண்ணப்பதாரர் அனைவரும் வடமாகாணத்தில் வசிப்பவர்களாக இருக்கவேண்டும். 18வது போட்டிக்காக இடம்பெறவுள்ள வாணவேடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகப் பங்குபற்றலாம்.

நிகழ்ச்சி ..............................
(பெரிய எழுத்துக்களில்)

பெயர்: ..............................

விலாசம்: ..............................

வயது: ......................

விளையாட்டுப்போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித்துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக்கொள்வேன்.

..............................
போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப்பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற்கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்கு பற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

பெற்றோர் அல்லது பாதுகாவலர்
ஒப்பம்

..............................

கலை நிகழ்ச்சிகளாக (1) நாதஸ்வரம், (2) பரத நாட்டியம், (3) மெல்லிசை, (4) வில்லுப்பாட்டு, (5) குட்டி நாடகங்கள், (6) யோகாசனம், (7) பொப் இசை, (8) லிம்போ நடனம், (9) பெல்லி நடனம், (10) மாயா ஜாலக் காட்சி, (11 மெய்வல்லுநர் காட்சி (இலங்கையின் பல மெய்வல்லுநர் பங்குபற்றுவது).

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் எந்தத் தனி நபரோ அல்லது பாடசாலையோ, கழகங்களோ விண்ணப்பங்களை இவ்வருடம் பங்குனி மாதம் 9ந் திகதிக்கு முன் அமைப்புச் செயலாளர், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

# வலி வடக்குப்பிரிவு விளையாட்டுவிழா

## காங்கேசன்துறையில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியாழன் வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் 11வது ஆண்டு விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமையும், சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் காங்கேசன்துறைப் பட்டினசபை மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவிற்குப் பிரதம அதிதியாகவிளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் திரு. டி. ரி. எஸ். பி. ஜயவர்த்தன கலந்துகொள்வார். திருமதி ஜெயவர்த்தன பரிசில்களை வழங்குவார்.

இவ்விழா முன்னாள் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபரும், பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தருமான திரு நா. அமிர்தசாகரன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. இதில் கௌரவ விருந்தினராக தற்போதைய உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா கலந்துகொள்கிறார்.

முதல் நாள் விழாவில் ஆண்களுக்கான 26 மைல் மரதன் ஓட்டம், 50 மைல் சைக்கிள் ஓட்டம் என்பனவும், பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டமும், கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகளும் முக்கிய நிகழ்ச்சிகளாயிருக்கும்.

சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஓட்டங்கள், பாய்தல், பரிதிவட்டம் எறிதல், கயிறிழுத்தல் போட்டி ஆகியனவும் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை மாலை பரிசளிப்புவிழாவும், பிரதமஅதிதியின் உரையும் இடம்பெறும். விழாவிற்கான ஒழுங்குகளைக் காரியதரிசி திரு.ஏ.முருகையா செய்துள்ளார். (அ)



## தவக்கால நற்சிந்தனை

''பழமையாய்ப் போகாத
பணப்பைகளையும்;
குறையாத
பொக்கிஷத்தையும்
பரலோகத்திலே
உங்களுக்குச்
சம்பாதித்து வையுங்கள்;
அங்கே திருடன்
அணுகுவதுமில்லை;
பூச்சி கெடுப்பதுமில்லை.
உங்கள் பொக்கிஷம்
எங்கே இருக்கிறதோ
அங்கே உங்கள் இதயமும்
இருக்கும்''

—லூக்கா:12:33-34

ஆம்: நாம் இறக்கும்போது நமக்குத்துணையாக எதை நாம் நாடவேண்டுமோ அந்த சர்வேசுரனின்திருநாமத்தை மறந்தே விடுகிறோம். அதனை மறந்து நாம் சேர்த்துவைத்த செல்வத்தின்மேல் தான் நம் மனம் நிலைக்கிறது. வேறெங்கும்செல்லாது. உலகியல் நெறியிலே ஊறிவளர்ந்த நாம் அதனை மறக்கக்கூடாதவ ராய் விடுகிறோம். இவ்வியல்பை வேதம் நமக்கு உணர்த்துகிறது. உயிரோடு பொருந்திய உணர்வு கலங்காமல் இருக்கும் போதே இறைவனின் திருவுருவைமனக் கண்ணால் உணரமுற்படு; அவரது திருநாமத்தை என்றும் போற்று என்று உணர்த்துகிறது.

நமது தேவைக்குமேல் பொருள் சேர்த்து வைக்க ஆசைப்படுகிறோம்; அப்படி ஆசைப்படுவது நன்மை தருமா? ஆசையே எல்லாத் துயரங்களுக்கும் மூலகாரணம். நம் தேவைக்குமேல் சேர்த்துவைத்தாலும் அவை எத்தனை நாட்களுக்கு நீடிக்கும்? அவை உலகத்தின் சிற்றின்பங்களுக்குத்தான் பயன்படுமேயன்றிப் பேரின்ப உலகிற்குப் பயன்படுமா?

—(ஞானஒளி)

## கூற்று விலை

### சாவகச்சேரி நகராட்சிமன்றம்

சாவகச்சேரி நகரசபைக்குக் கீழே காட்டப்பட்டுள்ள பொருட்கள் விநியோகம் செய்வதற்கு அரக்குமுத்திரையிட்ட கூற்று விலைகள் கோரப்படுகின்றன.

### பொருட்களின் விபரம்

1. காரியாலய, நூலக வாசிகசாலை... வாடி வீட்டுத் தளபாடங்கள்.
2. நாய் பிடிக்கும் வண்டி.
3. மின் விசிறிகள்.
4. கூட்டல் யந்திரம்.
5. உருக்கு அலுமாரி.

இதற்கான கூற்றுவிலைகள் 22-3-77-ந் திகதி முற்பகல் 10-00 மணி வரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கூற்றுவிலைப் படிவங்களை விண்ணப்பத்தின் பேரில் இக்காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். கூற்று விலைகளை அரக்குமுத்திரையிட்டு இடதுபக்க மேல் மூலையில் கூற்று விலை இல. தெளிவாக எழுதப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். அல்லது காரியாலயத்தில் உள்ள கூற்று விலைப் பெட்டியில் போடப்படல் வேண்டும். மேலும் தேவையான விபரங்களை இக்காரியாலத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

ஒப்பம்
**அன்ரன் அல்பிரட்,**
விசேட ஆணையாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
24-2-77. 5598

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சண்டிலிப்பாயில், துறட்டிப் பனையடியில் 4½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. கிணறு, மின்சார வசதிகள் உண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல.5582, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5582

### வகுப்புகள்

யந்திரவியல், படவரைஞர் (Mechanical Draughtsman) கற்றோருக்கு பிறநாடுகளிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்புகள் உண்டு. என்ஜினியர் நடத்தும் வகுப்பு ஆரம்பம் 5-3-77. சார்ட்டட் என்ஜினியரால் நற்சாட்சிப்பத்திரம் வழங்கப்படும். நியூபிறில்லியன் இன்சிரியூட். 'திருத்தணிகை' 284 பலாலிவீதி, கந்தர்மடம். 5596

## கட்டிடங்கள் பூர்த்தியாகின

கிளிநொசசி, புதன்

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்படும் பட்டினமண்டபம், நவீன சந்தை ஆகியவற்றின் வேலைகள் பூர்த்தியாகின்றன.

சுமார் 12 லட்சம் ரூபா செலவில் கட்டப்படும் இக் கட்டடவேலைகளைப்பட்டின நிர்வாகத்திடமிருந்து தனியார் கட்டிட ஒப்பந்தகாரர் பாரமெடுத்து செய்துவருகின்றனர் (அ)

## பாம்பு வேட்டை பயனளிக்க வில்லை

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சியை அடுத்துள்ள திருநகர் செல்லும் பிரதான வீதியின் ஓரத்தில் உள்ள புற்றில் குடிகொண்டிருக்கும் நாக பாம்பொன்று மறைந்திருந்து மக்களைத் தீண்டிவருகிறதாம். இற்றைவரை ஆறு பேருக்கு மேல் தீண்டியுள்ளதால், கர்ப்பிணிப்பெண் உட்பட இருவர் இப்பாம்பு தீண்டி மரணமாகியுள்ளனராம்.

இதனால் இப்பகுதி மக்களும் இவ்வழியால் செல்லும் மக்களும் பீதியடைந்த நிலையில் புற்றை வெட்டியும், அருகாமையில் உள்ள காட்டை வெட்டியும் பாம்பு அகப்படவில்லை.

இப்பாம்புப் புற்றுக்கு அருகாமையில் உள்ள புளியமரத்தடியில் நாகசிலையும் படமும் வைத்து பூசை செய்து பாம்பை வரவழைக்க மேற்கொண்ட முயற்சியும் பயனளிக்கவில்லை. (அ)


## இலவச படகு சேவை

மண்டைதீவிலிருந்து பாலைதீவு வரை 4-3-77 தொடக்கம் 7-3-77 வரை இலவச படகு சேவையும், யாழ் - மண்டைதீவு துறைமுகம் வரை பஸ் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

மண்டைதிவு ஆழ்கடல் தொழிலாளர்
நல நோக்குச் சங்கம்

5602

## கும்பாபிடேக மலர் வெளியீடு

### துன்னாலை வல்லிபுர ஆழ்வார் கோவில்

துன்னாலை வல்லிபுர ஆழ்வார் கோவில் கும்பாபிடேக மலர் வெளியீட்டிற்கு வல்லிபுர ஆழ்வார் சுவாமி மீது துதிப்பாடல்கள், கட்டுரைகள் தந்தருளுமாறு வேண்டுகிறோம். தகுதியான துதிப்பாடல்கள், கட்டுரைகள் தெரிவுக்குழுவினால் பரிசிலனை செய்து தகுதி கண்டு மலரில் இடம்பெறும்.

துதிப்பாடல்கள், கட்டுரைகள் பின்வரும் முகவரிக்கு 12-4-77க்கு முன் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

த. கெங்காதரன்,
மலர் வெளியீட்டு குழுத்தலைவர்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

5600

அரசியல் கைதிகள் சிறையில் இம்சை விவகாரம்:



# நெடுஞ்செழியன் மீது தடை விதிக்கக் கோரி மனு!

## முன்னுள் சிறை அதிபர் தாக்கல்

சென்னை, மார்ச் 2

அரசியல் கைதிகள் சென்னை மத்தியசிறையில் கொடுமைப் படுத்தப்படுகின்றனர் என்று கூறியுள்ள தி. மு. க. பொதுச் செயலாளர் டாக்டர் இரா. நெடுஞ்செழியனுக்கு எதிராக முன்னுள் மத்திய சிறைச்சாலை அதிபர் வழக்குத் தாக்கல்செய்துள்ளார்.

டாக்டர் நெடுஞ்செழியன் மீது இடைக்கால தடையுத்தரவை விதிக்குமாறும் முன்னுள் சிறைச்சாலை அதிபரான திரு. வித்தியாசாகரன், நகர நீதிபதி ஜனுப் டி. வி. ஏ. அப்துல் சமத் முன்னிலையில் தாக்கல்செய்துள்ள மனுவில் கேட்டுள்ளார்.

சென்னை மத்திய சிறையில் தாமும் உதவி ஜெயிலரும் அரசியல் கைதிகளைக் கொடுமைப் படுத்தியதாக டாக்டர் நெடுஞ்செழியன் கடந்த 26-ம் திகதி சென்னையில்நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றில் கூறியுள்ளதாகவும் நெடுஞ்செழியனின் கூற்றுக்கள் விஷமத்தனமானதும் முற்றிலும் பொய்யான - ஆதாரமற்றவை என்றும் திரு. வித்தியாசாகரன் தமது மனுவில் தெரிவித்துள்ளார். (இ)

# சர்க்காரியா அறிக்கையை தமிழக அரசு வெளியிட்டது

## 7குற்றச்சாட்டுகள் விபரம் உள்ளன

சென்னை, மார்ச். 2

தமிழ்நாடு முன்னுள் முதலமைச்சர் திரு. மு. கருணுநிதிக்கும், மற்றும் தி.மு.க. அமைச்சர்களான திரு. பா. உ. சண்முகம், அன்பில்தர்மலிங்கம், திரு.மாதவன் ஆகியோருக்கும் எதிராகலஞ்சம், நிர்வாகமோசடி போன்ற குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடத்திவந்த சர்க்காரியா கமிஷன் தமிழ்நாடு அரசிடம் சமர்ப்பித்திருந்த முதலாவது அறிக்கையை தமிழ்நாடு அரசு நேற்று வெளியிட்டது.

இதில் சர்க்காரியாகமிஷன் முன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 28 குற்றச் சாட்டுகள் ஆதாரபூர்வத்துடன் நிரூபிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானத்தில் பூச்சிமருந்து தெளிப்பது சம்பந்தமாக தனியார் விமானக்கம்பனிஒன்றிடமிருந்து அமைச்சர் அன்பில் தர்மலிங்கமும், திரு. கருணுநிதியும் 8 லட்சத்து 87 ஆயிரத்து 246ரூபாவைலஞ்சமாகப் பெற்றுக்கொண்டமை நிரூபிக்கப்பட்டுவிட்டதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தியேட்டர் ஒன்று அமைப்பது சம்பந்தமாக சொந்த நிலமே இல்லாத வரதராஜப் பெருமாளுக்கு உதவிசெய்யும் பொருட்டு அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு சட்டத்தில் திடீர்திடீரென மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளதும் நிரூபிக்கப்பட்டுவிட்டதாக அறிக்கை கூறுகிறது.

அவதூறுன கருத்துக்களையே அடிக்கடி பிரசுரிக்கும் வழமையுடைய நாஞ்சில்செழியனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டபோது அமைச்சர் மாதவனின் தலையீட்டால் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன, இவர் தன்னிச்சையாக நடந்து கொண்டதன் மூலம் நீதிமறுக்கப்பட்டுவிட்டதென்றும் அறிக்கைகூறுகிறது.

கொலை ஒன்று சம்பந்தமான விசாரணையில் அமைச்சர் ஒருவர் பொலிசாரின் விசாரணைக்கு இடையூறு விளைவித்து இந்த விசாரணையில் மிக நேர்மையின்றி நடந்துகொண்டுள்ளமை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது. இதில்கொலைகாரன் தப்பிவிட்டான் என்றுஅறிக்கைகூறுகிறது.

ஏ. எஸ். சிறினிவாசன் என்பவர் தமது நெருங்கியநண்பன் என்ற ஒரேயொருகாரணத்துக்காக திரு மு. கருணுநிதி இவருக்கு சாராயத் தொழிலை நடத்த அனுமதி வழங்கியதில் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம்செய்துள்ளார். சிறினிவாசன் அதிகவசதி படைத்தவரல்ல; ஒருதுண்டு நிலவசதிகூட இவரிடம்இல்லை; இவ்விதமானவருக்கு உதவி வழங்குவதில் கருணுநிதி தமதுஅதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்றும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கந்தப்பனுர்என்பவர்அமைச்சர்மாதவனின் மருமகன்என்பதற்காக 1 லட்சத்து 75ஆயிரம் ரூபா அரசாங்க பணத்திலிருந்து கொடுபட்டுள்ளது. கடனுதவியாக இதுவழங்கப்பட்டபோதிலும் இத்தொகை தவருன வழியில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் அறிக்கை கூறுகிறது.

இந்த அறிக்கை இந்திய ராஜ்யசபையில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. (ஆ)

## பிரதிநிதி மரணம்

டோக்கியோ, மார்ச் 2

ஜப்பானில் இலங்கையின் பிரதிநிதியாகக் கடமையாற்றிய திரு. டேவிட் வீரக்கோன் நேற்று காலமானுர். 25 வருடகாலமாக இப்பதவியைவகித்து வந்த இவர், ஒரு பிரபல வர்த்தகர். இலங்கையிலிருந்து கைத்தொழில் மற்றும் மட்பாண்டப்பொருட்களை ஜப்பானுக்கு இறக்குமதிசெய்வதில் பெரும் பங்கு வகித்தவர். (ஆ

கள்ளச் சாராயத்துக்கு

## சென்னையில் 5 பேர் பலி

### குஜராத்தில் 92 பேராக அதிகரிப்பு

சென்னை, மார்ச் 2

சென்னையில் கள்ளச்சாராயம் அருந்திய 5பேர் மாண்டனர்; ஏழுபேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனராம்.

வடசென்னையில்நடைபெற்ற இச்சம்பவத்தையடுத்து ஒரு பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதே வேளையில் குஜராத் - அகமதாபாத்தில் கள்ளச்சாராயம் குடித்து மரணமானேர் தொகை 92 ஆக அதிகரித்துள்ளதாம். இருவர் பெண்கள்.

3ஆஸ்பத்திரிகளில்அனுமதிக்கப்பட்டுள்ள 102 பேரின உயிரைக்காப்பாற்ற டாக்டர்கள் போராடிக்கொண்டிருக்கிருர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. 5 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர். குஜராத்தில் மதுவிலக்குச்சட்டம்அமுலில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ)

......

## தேர்தல் செலவு 15 கோடி ரூபா

புதுடில்லி, மார்ச் 2

32 கோடி மக்களை வாக்காளர்களாகக் கொண்ட இந்தியப் பொதுத்தேர்தலுக்கு 15 கோடி ரூபா செலவாகும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

30 லட்சம் ஊழியர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

3 லட்சத்து 50 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் 14 லட்சம் தேர்தல் அதிகாரிகள் நியமிக்கப்படுவர் என்றும் அரசு அறிக்கை ஒன்று தெரிவிததது. (இ)

## உற்சவம்

யாழ்ப்பாணம், வியா.

காரைநகர் திருமணற்காடு முத்துமாரியம்மன் கோவில் உற்சவம் இம்மாதம் 5-ம்திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 18-ம் திகதி தேர்த்திருவிழாவும் 19 ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (அ)

# அமெரிக்க கடல்எல்லைக்குள் விமான, கப்பல் ரோந்து

## மீன்பிடிக்க ஜப்பான் அனுமதி கோரியது; ரஷ்யா கொடுத்துள்ளது

வாஷிங்டன், மார்ச் 2

அமெரிக்கா தனது புதிய கடற்பிராந்திய சட்டத்தை நேற்று முதலாம் திகதி முதல் அமுலுக்குக்கொண்டு வந்துள்ளது. இதன்படி 200 மைல் கடல் எல்லை இதன் ஆதிக்கத்தில் இருக்கும். அதாவது உலகின் பத்துசதவீத கடல்பிராந்தியம் அமெரிக்காவிடம் இருக்கிறது.

நேற்றிலிருந்து முன்னர் போல் வெளிநாடுகள் இந்தக் கடற்பிராந்தியததில் மீன்பிடித் தொழிலை நடத்தமுடியாது. இதனைக்கண்காணிக்கும் பொருட்டு அமெரிக்கா தனது கடற்பிராந்தியத்தில் விமானரோந்துகளையும், கப்பல் ரோந்துகளையும் ஏற்படுத்தியுள்ளது. பசுபிக்சமுத்திரத்திலும், அத்திலாந்திக் சமுத்திரத்திலும் இந்த ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கடற்பிராந்தியத்தில் மீன்பிடித் தொழிலை நடத்தவிரும்புபவர்களிடமிருந்து அமெரிக்கா விண்ணப்பம் கோரியிருந்ததும் ஜப்பானிடமிருந்து பெருந்தொகையான விண்ணப்பங்கள் வந்து சேர்ந்ததும் நினைவிருக்கலாம்.

### ரஷ்யா ஜப்பானுக்கு அனுமதி

இது இப்படியிருக்க சோவியத் யூனியன் தனது மீன்பிடி வலயமான வடபசுபிக்கில் ஜப்பான் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கமுன்வந்துள்ளது. காலவரையின்றி இப்பிராந்தியத்தில் ஜப்பான் மீன்பிடித்துக்கொள்ள ரஷ்யா இணங்கியுள்ளது. 200 மைல்களை தனது கடல் எல்லையாக ரஷ்யா பிரகடனம் செய்துள்ளது. (ஆ)

## கோதுமை ஊழல் வழக்கு ஒத்திவைப்பு

சென்னை, மார்ச் 2

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணுநிதிமீதும் அவரது சக அமைச்சர்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ள கோதுமை ஊழல் வழக்கை விசேட நீதிமன்ற நீதிபதி திரு. சாமிக்கண்ணு இம்மாதம் 23-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கை விசாரிக்கஇந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது என்று திரு. கருணுநிதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு இன்னும் உயர் நீதிமன்றத்தில் முடிவுருமல் இருப்பதால் வழக்கு விசாரணையை ஒத்திவைப்பதாக நீதிபதி தெரிவித்தார்.

### கருணுநிதி மனு

இதே வேளையில், தேர்தல் பிரசாரவேலைகளைத் தாம் கவனித்து வருவதால் நீதிமன்றத்திற்கு வரமுடியாதிருக்கிறது என்றும் வழக்கை ஒத்திபோடுமாறும் திரு. கருணுநிதி மனு ஒன்றைத் தாக்கல்செய்துள்ளார். (இ)

## "சைவத்திற்கும் பேரிழப்பு!"

யாழ்ப்பாணம், வியா.

''மறைந்த தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம், அரசியல், சட்டத்துறையில்மட்டுமல்ல, தமிழுக்கும் சைவத்திற்கும் சிறந்த தொண்டாற்றியுள்ளார். அன்னுரின் மறைவு, அரசியல். சட்டத்துறைகளுக்கு மட்டுமல்ல தமிழுக்கும், சைவத்திற்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.''

நல்லூர் இந்து இளைஞர் மன்ற ஆட்சிக்குழுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

டாக்டர் எஸ். சண்முகலிங்கம் தலைமையில் நடந்தஇக்கூட்டத்தில் ஜி. ஜி. யின் மறைவு குறித்து 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அன்னுரின் குடும்பத்தினருக்கு அனுதாபத் தீர்மானத்தை அனுப்பிவைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. (க)

## இந்தியத் தேர்தல் அரங்கு

### வாக்கும் ஒரு ரூபாவும் கோரினர்

ஹுப்பிலியில் தேர்தல் பிரசார ஊர்வலமொன்றை நடத்திய 100 வழக்கறிஞர்கள் பொதுமக்களிடம் ஜனதா கட்சிக்கு ஒவ்வொருவரிடமிருந்தும் ஒருரூபாவும் வாக்கும்கோரினர்.

### ஜனதாகட்சியின் வெற்றி நிச்சயம் என்கிருர் விஜயலட்சுமி பண்டிட்

"ஜனதாகட்சியால் ஆட்சியை சீராக நடத்தமுடியாது என்று செய்யப்படும் பிரசாரம் அர்த்தமற்றது''. ''ஆட்சியைச் சிறப்புற நடத்தி, ஜனநாயகக் கோட்பாடுகளைக் காக்கும் சகல தகுதிகளும் அதற்குண்டு. அதன் வெற்றியும் நிச்சயம்'' என்று திருமதி விஜயலட்சுமி பண்டிட் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினுர்.

### அவசரநிலை பற்றி ஜெகஜீவன்

இந்தியாவுக்கு வெளிநாட்டு மிரட்டல்கள் எதுவுமில்லை. இந்நிலையில் அவசரகாலநிலையை அமுலில் வைத்திருக்க வேண்டிய அவசியம் கிடையாது என்று திரு. ஜெகஜீவன்ராம் கூறினுர்.

### தேர்தல்பிரசார வேலைக்கு இந்திரா அரசுவிமானத்தில் செல்கிருர்

திருமதி காந்தியும், காங்கிரஸ் கட்சியினரும் அரசாங்க விமானங்களையும், ஹெலிகாப்டர்களையும்பாவித்துவருகிருர்கள் என்று ஜனதா கட்சித்தலைவர் திரு. மொரார்ஜி தேசாய் குற்றம் சுமத்தியுள்ளார்.

## மணிவாக்கு

சத்தியத்திற்கு இருக்கும் முகம் விசேஷமான தொன்று; அந்த முகத்தை நோக்கும் எவனும்(அது சத்தியம் என்று) பற்றுறுதி யூட்டப்பெறுகிறன். சூரியனைக் காட்டுவதற்கு விளக்கு ஒன்று வேண்டியதில்லை அல்லவா? சூரியன் சுயம் பிரகாசமானது.

—சுவாமி விவேகானந்தர்

ஈழநாடு
THE EELANADU

# அரிசி விலை

அரிசிவிலை இறங்கியுள்ளது. மேல்மாகாணத்தில் மட்டுமல்ல நாட்டின் பல பகுதிகளிலும் அரிசிவிலை வெகுவாகக் குறைந்துள்ளது மகிழ்ச்சியளிக்கும் செய்தி.

மகாபோகத்தில் நெல் உற்பத்தி அதிகரித்திருப்பதே அரிசிவிலைஇறங்கியிருப்பதற்குக் காரணமாகும்.

நாட்டின் சில பகுதிகளில் வறட்சியும் மற்றும்சிலபகுதிகளில் வெள்ளமும் வேறு சில பகுதிகளில் பூச்சிகளும் நெல்விளைச்சலைப் பாதித்தது உண்மைதான்.

ஆனாலும் சில பகுதிகளில் அமோக விளைச்சல் கண்டதால் நாட்டின் சகல பகுதிகளிலும் அரிசிவிலை இறங்கியுள்ளது.

மாவட்டத்துக்கு மாவட்டம் அரிசிகொண்டு போவதற்கும் யாழ்ப்பாணமாவட்டத்துக்குள்ளேயே ஆனையிறவைத் தாண்டி அரிசி கொண்டுசெல்வதற்கும்முன்னர் தடைவிதிக்கப்பட்டிருந்ததால் சில பகுதிகளில் நெல்விளைச்சல் அதிகரித்தாலும் மற்றும் இடங்களில் அரிசிவிலை அதிகரித்தேஇருந்தது.

நல்ல காலமாக இந்தத் தடைகள் நீக்கப்பட்டுவிட்டன. இதனால் நாட்டின் சகல பகுதிகளிலும் இப்போது அரிசியின்விலைஇறங்கியிருக்கிறது.

இந்த விலைஇறக்கம் இவ்வருடம் ஜூலை மாதம்வரை நீடிக்குமென்கிறார் நெற்சந்தைப்படுத்தும்சபைத் தலைவர் திரு.எம்.ஜே.பெரேரா.

நெற்சந்தைப்படுத்தும் சபை இப்போது நெல் உத்தரவாதவிலைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவுசெய்து வருகிறது.

என்றாலும் தனிப்பட்ட வியாபாரிகள் கமத்துக்கே சென்று நெல் உத்தரவாத விலையிலும் பார்க்கக்குறைந்த விலைக்கு நெல்கொள்வனவு செய்கின்றனர்.

நெல்லுக்குரிய பணத்தை கமத்திலேயே கையில்கொடுத்துவிட்டு நெல்லை வாங்கிக் கொள்கின்றனர்.

நெல் உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ் நெற்சந்தைப்படுத்தும் சபை, நெல்லுக்குதனிப்பட்டவர்த்தகர்களைவிட கூடியவிலைகொடுத்தாலும் பணம் உடனடியாகக் கைகளில் கிடைப்பது கஷ்டம்.

இந்தக் கஷ்டங்களை நீக்கி நெல்லுக்குரிய பணம் உடனடியாகவே விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய வழிவகைகளைச் செய்தால் தனிப்பட்ட வர்த்தகர்களும்தரகர்களும் இலாபமடிக்காமல் விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் பயன்கிடைக்கும்.

நெல்விளைச்சல் அதிகரித்திருந்தாலும், அரிசிவிலை இறங்கியபோதிலும் வெளிச்சந்தையில்கல்லில்லாத அரிசி வாங்குவது முயற்கொம்பு.

அரிசியில் கலப்படம், அளவுக்குறைவு ஆகியவற்றை ஒழித்துக்கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியம்.

## ஆசிரியருக்குக் கடிதம்:

# பசுவதையைத் தடுக்க அரசு சட்டம் இயற்றுமா?

மனிதருக்கு உயிர்ச்சத்து மிக்க சில உணவு வகைகளிற் பசுப்பாலும் முதலிடம் பெறுகின்றது என்பது யாவரும் அறிந்ததொன்றாகும். ஒரு போத்தல் பசுப்பாலின் ஆகக்குறைந்த விலை ஒரு ரூபா ஆகின்றது.

இதற்குப் பல காரணங்கள் இருப்பினும் முக்கியமான காரணம் இலங்கையில் இன்னமும் பசுவதை செய்யப்படாதிருப்பதேயாகும்.

பசுவிலிருந்து பால் மாத்திரமன்றிப் பயிர்ச் செய்கைக்கு அத்தியாவசியமான எருவும் இன்னோரன்ன பிற பயன்களும் எமக்குக் கிடைக்கின்றன.

பசுவதை அனுமதிக்கப்பட்டிருப்பதனாலேயே இவைகள் எல்லாவற்றுக்கும் இங்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பசு எருவின் பற்றாக்குறை காரணமாகவே செயற்கைப் பசளைகளைப் பாவிக்கும் நிலையும் எமக்கு ஏற்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி பசுவதையை இலங்கையில் நிலவுகின்ற பிரதானமான சமயங்களும் அங்கீகரிக்கவில்லை.

பசு வதை எமது அயல் நாடான பாரதத்திலும் அரசினரால் சட்ட மூலம் தடை செய்யப்பட்டுள்ளது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

பண்டைக் காலத்தில், பசுவினால் கிடைக்கும் பல வகையான பயன்களைக் கருதியோ, என்னவோ, தமிழ் மக்கள் பசுவைத் தெய்வமாகவே கருதிப் பூசை செய்துவந்துள்ளார்கள்.

ஆனால் பசு வதை பெருகப் பெருகப் பசுவைப் பூசிக்கும் முறையும் குறையத் தொடங்கிக் காலப்போக்கில் கோ பூசை அற்றுப்போய்விட்டதென்பது மனம் மிக வருந்துதற்குரியதொன்றாகும்.

ஆனாலும், அறிந்தோ அறியாமலோ, தமிழ் மக்கள் ஆண்டுக்கொருதடவை தைப்பொங்கலுக்கு மறுநாள் பட்டிப் பொங்கல் என ஒன்றைக் கொண்டாடி அன்றைய தினம் பசுக்களைப் பூசிக்கின்றார்கள் என்பதனை எண்ணும்போது உள்ளத்தில் அணுவளவு மகிழ்ச்சியேற்படவே செய்கிறது.

பழையபடி தமிழ்மக்களிடையே கோ பூசையை ஏற்படுத்துவதற்கு முன்னோடியாக எல்லாச் சைவ ஆலயங்களிலும் கோபூசை தொடங்கப்படவேண்டும்.

ஆலயங்களில் ஆரம்பமாகும் கோபூசை நாளடைவில் பசு வளரும் ஒவ்வொரு வீட்டிற்கும் பரவும்படி செய்யவேண்டும்.

இலங்கையில் உள்ள பாடல் பெற்ற சிவாலயமான திருக்கேதீச்சரத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று தொடக்கம் கோ பூசை தொடங்கப்பட்டுள்ளதென்பது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். தினந்தோறும் முற்பகல் 7-35க்கு ஆரம்பமாகும் காலைப் பூசையின் முடிவில் கோபூசை இடம் பெறுகின்றது.

இவ்வாலயத்தில் கோபூசை தொடங்கப்படவேண்டும் என்ற எண்ணத்தை முதன் முதலில் திருக்கேதீச்சரம் ஆலயத் திருப்பணிச் சபையினரின் உள்ளத்தில் விதைத்த ஏழாலையூர்ப் பண்டிதர் திரு. மு. ஞானப்பிரகாசமும், அதனை ஏற்றுச் செயலாக்கிய திருப்பணிச் சபையினரும், குறிப்பாகச் சபைச் செயலாளர் திரு. இ. நமசிவாயமும் சைவ சமயத்தவரின் போற்றுதலுக்குரியவர்களாகும்.

திருக்கேதீச்சரத்தில் ஆரம்பமாகியுள்ள கோபூசையானது இலங்கையிலுள்ள எல்லாச் சைவ ஆலயங்களிலும் இடம் பெறல்வேண்டும். இதனைச் சகல சைவ ஆலய நிர்வாகிகளும் தங்கள் கவனத்திற் கொண்டு செயலாக்கவேண்டும்.

இப்படியாகக் கோபூசை பரவிவரும்போது பசு வதையும் காலக்கிரமத்தில் நின்றுவிடும். பசுச் செல்வம் பல்கிப் பெருகும். நாட்டில் பாலாறு பெருகி ஓடும்.

பசு வதையைத் தடைசெய்யாது விட்டுவிட்டு நாட்டில் பாலுந்தேனும் பெருகி ஓடும் என்று எதிர்பார்த்திருப்பது முயற்கொம்பேயாகும்.

பசு வதைத் தடைக்கு இலங்கையிலுள்ள சைவசமய நிறுவனங்களும் கொல்லாமையை அங்கீகரிக்காத மற்றச் சமய நிறுவனங்களும் அயராது உழைக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இதற்கு உதவும்பொருட்டுப் பௌத்த மதத்தைப் போற்றி வளர்க்கும் இலங்கை அரசு சட்டமியற்றிப் பசு வதையைத் தடைசெய்யவேண்டும் என்பதே எல்லோரினதும் பேரவாவாகும்.

எமது இந்தப் பேரவாவினை இலங்கை அரசு நிறைவே (அற்)

'மூருகு'
திருக்கேதீச்சரம்

# நாணயம்மிக்க அரசியல்வாதி ஈ. வெ. கி. சம்பத்

ஈழத்துச் சிவானந்தன்

தென் தமிழகத்தில் சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்துசமுதாய மூடத்தனங்களை ஓடச்செய்த ஈரோட்டு பெரியார் ஈ. வெ. இராமசாமிநாயக்கரின் பெருமகனும், தொடக்ககாலத்தில் தந்தை பெரியாருடனும் தளபதி அறிஞர் அண்ணாவுடனும் சமூகமறுமலர்ச்சிப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டவருமான சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் சென்ற வாரம்சென்னையிலே மாரடைப்பினால் மரணமான செய்தி தமிழ்ப்பற்றும் தமிழர் நாகரிகப்பற்றும் மிக்க தமிழ்நெஞ்சங்களுக்குக் கலக்கத்தைத் தந்தது.

தமிழ்நாட்டு அரசியல் அரங்கில் நாணயம்மிக்க அரசியல் வாதியாய் விளங்கியவர் திரு. சம்பத். பள்ளிப்படிப்போடு பகுத்தறிவுப் பழக்கத்தையும் பாடமாக மேற்கொண்டு அறிவுத்துறையில் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்தார். தந்தை பெரியாரோடு முரண்பட்டு திராவிடமுன்னேற்றக் கழகம் தொடக்கப்பட்ட நாளில் அதன்வளர்ச்சிக்குத் தளராது உழைத்த பெருமை இவருக்குண்டு.

தி. மு. க. வரலாற்றில் சம்பத்தின் பாத்திரமும் பங்களிப்பும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாய் திகழ்வதையாரும் மறுக்க முடியாது. கொள்கை ஆர்வத்தாலும் குறிக்கோளின் பற்றினாலும் ஈரோட்டுக்குடும்பத்தில் தனித்தன்மைவாய்ந்த இலட்சிய வாதியாய் சம்பத் பவனி வந்தார்.

தி. மு. க. பேச்சாளர்களில் தனக்கென தனிப்பாணி அமைத்துக்கொண்டு மேடை நாகரிகத்தில் சோடை போகாது, சொல்லாட்சியில் சோர்வுதட்டாது– சொல்லின் வல்லவனாய் அஞ்சாநெஞ்சனாய் விளங்கியதால் சொல்லின் செல்வரெனப் பலராலும் பாராட்டப்பெற்றவர். அரசியல் அரங்கில் இலக்கிய வார்த்தைகளைப் பொருத்தம் பார்த்துப்பயன்படுத்தும் ஆற்றலும் இவருக்கிருந்தது. ஒழுக்கம்,சலசலப்பின்மை,நாணயம் நேர்மை என்பன இவருக்குரிய அணிகலன்களாய் அமைந்தன. இதனாலேயே கருத்துவேறுபாடு கொண்டு தி. மு. கழகத்தை விட்டுவிலகியபோது அறிஞர் அண்ணா, சம்பத்தை மீண்டும் சமாதானமாக்குவதில் முனைந்துபாடுபட்டார். தெளிந்த சிந்தனையாலும் ஒழிவுமறைவற்ற வெளிப்படை அபிப்பிராயங்களாலும் சம்பத்தின் எதிரிகள்கூட நல்ல மரியாதை கொடுத்திருக்கிறார்கள்.

தி. மு. கழகத்தைவிட்டு விலகிய காலத்தில் ஏற்பட்ட கொந்தளிப்புகள்எத்தனையோ. கழகத்தை விட்டுப்பிரிந்த சம்பத், தமிழ்த்தேசியக்கட்சி என்னும் ஒருபுதிய அமைப்பை கவிஞர் கண்ணதாசனோடு சேர்ந்து தொடக்கி வளர்த்தார். அவ்வமைப்பு தமிழ் மாநிலத்தை தனித்தேசியமாக்கக்கோரியதோடு இந்தியாவிலுள்ள பதினான்கு தேசிய மொழிகளுக்கும் மொழிவழித் தசியங்களுக்கும் அந்தஸ்துக் கேட்டு வற்புறுத்தியது.

தமிழ் மொழிக்கு உரிய மரியாதை கிடைப்பதற்கும் தமிழினம் தனது தனிக் குணங்களோடு சிதைவுபடாமல் திரண்டு உயர்வதற்கும் தமிழ் மாநிலம் தனக்கேயுரிய எல்லைகளோடு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் தமிழ்த் தேசியக்கட்சி முன்னின்றுபாடுபட்டது.

அக்கட்சியின் கொள்கைகளைப்பரப்புவதற்கு ''தமிழ்ச் செய்தி''என்னும் நாளிதழைத் தொடக்கிநடத்தினார். அந்த இதழில் அரசியலோடு தமிழ் இலக்கியம், நாகரிகம், பண்பாடு முதலியனபற்றியும் செய்திகளும் கட்டுரைகளும் வெளியாகின. அந்த இதழ்மூலமாக எனக்கும் சம்பத்துக்கும் உணர்வுபூர்வமான நட்பு உண்டாகியது. ஒருமுறைகட்சிப்பிரசாரத்திற்காக சிதம்பரத்துக்கு வந்த சம்பத், 28-2-65'தமிழ்ச் செய்தி' வாரமலரில் கவிஞர் கண்ணதாசனைப்பற்றி நான் எழுதியிருந்த கடிதம்ஒன்றைப் பாராட்டி தமிழ்ச்செய்திக்கு இலக்கியம் சம்பந்தமான கட்டுரைகளை எழுதும்படி கேட்டுக் கொண்டார்.

திரு. சம்பத், திருக்கோவில்களிலே தமிழ் அருச்சனை நடைமுறைக்கு வரவேண்டுமென்ற தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் கோரிக்கைக்குஆதரவாகக் குரல் கொடுத்தார். இதனால் குன்றக்குடிஅடிகளாரின்நட்பும் சம்பத்துக்குக் கிடைத்தது. தமிழ்த்தேசியக்கட்சி சென்னையிலே நடத்திய முத்தமிழ் மாநாட்டில் குன்றக்குடிஅடிகளார் பங்குகொண்டு சிறப்புரையாற்றி சம்பத்தின் தமிழ் உணர்வை மெச்சி இருக்கிறார்.

தனிக்கட்சி நடத்திய சம்பத் அன்றைய சூழ்நிலையில் பொருளாதார நெருக்கடியால் பெரிதும் பாதிக்கப்பட்டார். ஜனநாயக சோஷலிச தத்துவத்தாலே ஈர்க்கப்பட்ட ஈ. வெ. கி. சம்பத்தை கர்மவீரர் காமராஜர் காங்கிரசில் சேரும்படி அழைப்பு விடுத்து; காங்கிரஸ் இரண்டாக உடைபடாத அந்தக்காலத்தில் குட்டிக் காங்கிரஸ் என்று பிறரால் வருணிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கட்சியை காங்கிரசோடு இணைத்துக்கொண்டார். தலைவர் காமராஜருடமுள்ள சில பழக்கங்களும் பண்பாடுகளும் சம்பத்திடமிருந்தன. இதனாலே சம்பத்தைதமிழகத்தின் இரண்டாவது காமராஜ் என்று புகழ்ந்தவர்களும் உண்டு.

திரு. சம்பத் டெல்கிப் பாராளுமன்றத்தில் தி. மு. க. வின் பிரதிநிதியாக அங்கம் வகித்தவர். அந்தக்காலத்தில் சென்னை மாகாணத்திற்கு 'தமிழகம்' எனபெயர் சூட்டும்படி பண்டிதர் நேருவிடம்கேட்டார். நேருவும்அதற்குச்சம்மதமளித்திருந்தார். இந்த நிகழ்ச்சியும் தமிழக அரசியல்வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். அறிஞர் அண்ணா சம்பத்தை டெல்கிப்பாராளுமன்றத்திற்கு அனுப்பியதிலிருந்து சம்பத்திடம் அவருக்கிருந்தஅன்பைப் புரிந்துகொள்ளலாம். நாட்டிலுள்ள அரசியல் சூழ்நிலைகள் காரணமாக சம்பத்தின் மனம் வளர்ச்சியுற்றோ, தளர்ச்சியுற்றோ கட்சிகளை மாறியிருக்க ஆனால்அவருடைய அரசியல்லாபம்நாணயமும்நாகரிகமும்மாசுபடாதவை. அகில இந்தியக் காங்கிரஸ் இரண்டாக உடைபட்டபோது முதலாளித்துவ முகாமை விட்டகன்று, முற்போக்கு முகாமாக இந்திரா காங்கிரஸைக் கணித்துக் கொண்டு, அக்கட்சியின் முக்கிய பிரமுகராக சம்பத் விளங்கினார். சம்பத் சுயமரியாதை இயக்கத்தால் பொதுவாழ்க்கைக்கு வந்தவராயினும் மூடப் பழக்கங்களை நீக்கிய, சமய அனுட்டானங்களைமதித்தவர். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சமயக் கருத்துக்களையும் ஆழ்ந்த உண்மைகளையும் திரு.சம்பத் விளங்கிக்கொண்டதோடு பொதுமக்களுக்கு விளக்குவதிலும் அக்கறை காட்டியவர். நாகூர் மிலாத் நபி பெருவிழாவில் 'நபிகள்நாயகம்' பற்றி நாயக்கர் வம்சத்தினரான சம்பத் ஆற்றிய உரை தமிழகத்தில் பிரசித்தமானது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நான் எழுதி வெளியிட்ட 'ஈழத்தில் யான் கண்ட சொற்செல்வர்கள்' என்னும் நூலில் திரு. வ. பொன்னம்பலத்தை உருவ அமைப்பில் ஈ. வெ. கி. சம்பத்தை ஒத்திருப்பவர் என்று குறிப்பிட்டுள்ளேன்.

ஆம்! வ. பொ.வைப் போல் உருவ ஒற்றுமை கொண்ட சம்பத், தமிழ்ச் சமுதாயத்தின் சம்பத்தாகத் திகழ்ந்த அறிவாளி, ஐம்பத்தொரு வயதில் அகால மரணமடைந்தது கவலைக்குரியதே. அவருக்குப் பொருளாதாரத் துன்பம் ஏற்படும்போதெல்லாம் உதவிபுரிந்த புரட்சி நடிகர் எம். ஜி. ஆரும், கவிஞர் கண்ணதாசனும் இனிமேலும் அந்தப் பணியைத் தொடர்ந்துசெய்து சம்பத்தின் பிள்ளைகளை மேல் நிலைக்குக் கொண்டுவர முயற்சிக்கவேண்டும், முயற்சிப்பார்கள்.

பொது வாழ்க்கைக்காகத் தனது பரம்பரைச் சொத்துக்களை விற்றுச் செலவுசெய்த ஓர் இலட்சிய வீரனின் குடும்பத்திற்கு உதவவேண்டியது பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் எல்லோருக்கும் உரிய கடமையாகும்.

## இன்று நூல் வெளியீடு

சுழிபுரம், வியாழன் அருட்கவி சீ. விநாசித்தம்பி பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள்மீது பாடப்பட்ட ''தோத்திரப் பாமாலை'' நூல் வெளியீடு இன்று வியாழன் மாலை பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவிலில் நடைபெறவுள்ளது. (அ)

சங்கானை ப. நோ. கூ. சங்க

# பணிப்பாளர் சபை உறுப்பினர் ராஜினுமா செய்ய வேண்டும்

## பாவனையாளர் சபை கோரிக்கை

சங்கானை, புதன்

சங்கானை ப.நோ.கூ. சங்கத்தின் நிர்வாக ஊழல்களை அகற்றி புனருத்தாரணம் செய்யவும், இன்றைய சங்க ஊழியரின் நியாயமான வேலை நிறுத்த நெருக்கடியைத் தீர்க்கவும், பாவனையாளர்களை விடுத்தும் இன்னல்களை நீக்கவும் சங்கானை ப. நோ. கூ. ச. பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ராஜினுமாச் செய்வது அத்தியாவசியமாகையில் அவர்களை ராஜினுமாச் செய்யுமாறு பாவனையாளர்சபை கோருகிறது.

சங்கானை ப. நோ.கூ. சங்க வேலைநிறுத்தப் பற்றியும் பங்கீட்டுப் பொருள் விநியோகம் சீர்குலைவுகள் பற்றியும் ஆராய்வதற்கான பொதுக்கூட்டம் ஒன்று சங்கானை அரசடி ஆலய வைரவர் முன்றலில் நேற்று முன்தினம் தலைவர் திரு. அ. சின்னையா சமாதான நீதவான் தலைமையில் நடைபெற்றது.

### வெள்ளிக்கிழமை சத்தியாக்கிரகம்

பொதுச்சபைக் குழுத் தலைவர் திரு. ச. குலசூரியன் பேசுகையில் கூறியதாவது: 'சங்க ஊழியர் பிரச்னைகளை நிர்வாகம் தீர்க்க மறுத்துவிட்டது. ஆகையால் பங்கீட்டுப்பொருள் விநியோகம் ஊழியர்கள்மூலம் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. ஆகையால் பொதுச்சபைப் பிரதிநிதிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் சத்தியாக்கிரகம் செய்யவிருக்கின்றனர். இதனையொட்டி சகல பொதுமக்களும் அன்றைய தினம் பங்குதாரர்களாகவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றனர்.

### மக்கள் பாதிப்பு

திரு. கி. தாமோதரம்பிள்ளை பேசுகையில்: அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் இன்று நியாயமற்றமுறையில் நடந்து கொண்டார்கள் என்றும் இதனல் நிர்வாகத்தில் சர்வாதிகாரப்போக்கு இடம்பெற்றுள்ளதென்றும் இதன்விளைவுதான் தொழிலாளர் பிரச்னைதீர்க்கப் படாமல் பொதுமக்களும்பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். ஆகையால் எங்கள் பொதுச்சபை இப்பணிப்பாளர்சபையை விலகிக்கொள்ளும்படி கேட்டுள்ளது' என்ருர்.

கூட்ட அமைப்பாளர் திரு. ச. கந்தசாமி தெரிவித்ததாவது: 'சங்கானை ப.நோ.கூ. சங்க நிர்வாகம் அழிவுப் பாதையைநோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. இதனைத் தடுத்து நிறுத்தி தொழிலாளர் பிரச்னையைத் தீர்த்து பொது மக்களுக்குப் பங்கீட்டுப் பொருட்களை வழங்குவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். இதனைச் செயற்படுத்த ஒரு கட்டுக்கோப்பான அமைப்பு வேண்டும்.'

தொழிற்சங்கப் பிரதிநிதி திரு. பெ. கனகரத்தினம்பேசுகையில் தெரிவித்ததாவது:-

### தந்திகளும் கடிதங்களும்

எமது வேலைநிறுத்தம் இது முதல்தடவையல்ல, இன்று இந்த நிர்வாகத்தைப்பற்றி மேலிடத்துக்கு கடிதமூலமாகவும் தந்திகள்மூலமாகவும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் தெரிவித்திருந்தோம். ஆனல் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஆனல் தொடர்ந்தும் நாம் வேலைநிறுத்தம் செய்துகொண்டிருக்கிறோம்.

### பொன்னுத்துரை அறிக்கை

எங்களுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் செயற்படுத்தப் படவில்லை. திரு. பொன்னுத்துரை அறிக்கை; லியனகே விசாரணை அறிக்கை முதலியனவும் இவரை சம்பந்தப்பட்டவர்களால் நடைமுறைப்படுத்தப் படவில்லை. இதனல் ஊழியர்கள் பாதிக்கப்பட்டதுடன் பழிவாங்கலுக்கும் உட்பட்டார்கள். எங்கள் சங்கம்வடபகுதியில் மாத்திரமல்லாது இலங்கையிலேயே முன்னணியில்நின்றது. இதனை மீண்டும் அந்நிலைக்குக் கொண்டுவருவதற்கு தொழிலாளர்களாகிய நாம் பின்நிற்கமாட்டோம். பொதுமக்களாகிய நீங்கள்எங்களுக்கு ஒத்துழைப்பு நல்குவதுடன் விழிப்புடன் இருக்கும்வண்ணமும் கேட்டுக்கொள்கிறேன்.

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

சங்கானை ப.நோ.கூ.சங்கத்தின் நிர்வாக ஊழல்களைத் துடைத்து புனருத்தாரனம் செய்யவும் இன்றைய சங்க ஊழியரின் நியாயமான வேலை நிறுத்த நெருக்கடியைத் தீர்க்கவும், பாவனையாளர்களை வருத்தும் இன்னல்களை நீக்கவும் சங்கானை ப. நோ. கூ. சங்க பணிப்பாளர்சபை உறுப்பினர்கள் ராஜினுமாச்செய்தல்அத்தியாவசியமாகையால் இவர்களை ராஜினுமாச் செய்யுமாறு பாவனையாளர் சபை வேண்டுகிறது. இத் தீர்மானங்கள் சங்கானை பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### பணிப்பாளர் சபையைக் கலைக்கவும்

இதுபற்றி பின்வரும் அவசரத் தந்தி பிரதமர், கூட்டுறவு மந்திரி, வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப்பேரவை உறுப்பினர், தபால்-தந்தி அமைச்சு ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பாவனையாளர் சார்பில் அனுப்பப்பட்ட தந்தியின் சாரம் வருமாறு: சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் தொடர்ந்து நடைபெறும் வேலைநிறுத்தத்தினல் பாவனையாளர்களுக்கு தீரொணு கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளது. நீடித்த நிர்வாக சீர்கேடே இதற்குக் காரணமாகின்றது. ஆகையால் பணிப்பாளர்சபையைஉடனடியாகக் கலைக்கவும்.

ஆசிரியர் பொ.சிவகுரு, ப. இராசகுரு, எஸ்.கே. திருச்சிற்றம்பலம் மற்றும் பலர் உரையாற்றினர். (க)

# சங்கானை உதவி அரசாங்க அதிபர் காரியாலயம்முன் சத்தியாக்கிரகம்

## ப. நோ. கூ. ச வேலைநிறுத்தத்தை ஆதரித்து பொதுமக்கள் ஏற்பாடு

சங்கானை, புதன்

சங்கானை ப. நோ. கூ. சங்க ஊழியர் வேலைநிறுத்தப் பிரச்னை தீர்த்துவைக்கப்படாத பட்சத்தில் இம்மாதம் 5-ம் திகதி சங்கானை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்குமுன் பொதுமக்கள் சத்தியாக்கிரகம்செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சத்தியாக்கிரக ஏற்பாட்டைச் செய்வதற்கென திரு. ச. குலசூரியன் தலைமையில் 7 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த சத்தியாக்கிரக இயக்கத்தில், பணிப்பாளர்சபை பிரதிநிதிகள் பொதுச்சபை உறுப்பினர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள், கூட்டுறவு ஊழியர்கள் கிளைக்குழு உறுப்பினர்கள் கூட்டுறவு ஊழியர்கள், பாவனையாளர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் கடந்தபதினெரு தினங்களாக நடைபெற்றுவரும் வேலைநிறுத்தம்பற்றி ஆராய்வதற்கு சுயேச்சையான பொதுச்சபை உறுப்பினர்கள் கிளைக்குழு அங்கத்தவர்களைக் கொண்ட இரண்டாவது பொதுக்கூட்டம் ஒன்று திரு. ச. குலசூரியன் தலைமையில் சங்கானை பட்டினசபை நூல்நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் கூட்டுறவு அதிகாரசபை தொழிலாளர் பிரச்னைகள் சம்பந்தமாக இளைப்பாறிய கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு கே. எஸ். பொன்னுத்துரையின் விசாரணையிலிருந்து யாழ். கூட்டுறவு அதிகாரசபையினரால் தெரிந்து அனுப்பப்பட்ட 34 பணிப்புரைகளையும் உடனடியாக அமுல்நடாத்தும்படி தாமும் தமது குழுவும் சங்கத்தலைவரையும் பணிப்பாளர் சபையையும் நேரடியாக பல தடவை சந்தித்து வேண்டியபோது அவற்றை முழுமையாக அமுல்நடத்த தலைவரும் பணிப்பாளர் சபையும் மறுத்துவிட்டதாக திரு. குலசூரியன் பொதுச்சபை பிரதிநிதிகளுக்கும் குழு அங்கத்தவர்களுக்கும் தெரிவித்தார்.

34 பணிப்புரைகளையும் தனித்தனியாக சபையோருக்கு வாசித்து விளக்கியபின்னர் அதில் நான்கு பணிப்புரைகளை ஏற்கனவே அமுல்செய்துள்ளதாகவும் மற்றும் 26 பணிப்புரைகளை அமுல் செய்ய இணங்கியுள்ளதாகவும் மிகுதியை அமுல்செய்ய மறுத்ததாகவும் திரு. குலசூரியன் சபைக்குத் தெரிவித்தார்.

### நம்பிக்கை இழந்துவிட்டது

அரசாங்க அதிகாரிகளால் அனுப்பப்பட்ட பணிப்புரைகளை அமுல்நடாத்த மறுக்கும் சங்க தலைவரும் பணிப்பாளர் சபையும்வேண்டுமென்றே மக்களுக்கு கஷ்டத்தை உண்டாக்கு கிருர்களென்றும் இனல் சங்கானை ப. நோ. கூ. சங்கத் தலைவரிலும் பணிப்பாளர் சபையிலும் இச் சபை நம்பிக்கை இழந்துவிட்டதென்று திரு. மு. கதிர்காமத்தம்பி முன்மொழிய திரு. ந. சிவசிதம்பரம் அனுமதிக்க சபை ஏகமனதாக தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது.

### மூன்று நாள் அவகாசம்

இதையடுத்து திரு.ச.குலசூரியன் தலைமையில் தெரிவுசெய்யப்பட்ட தூதுக்குழு மேலதிகாரிகளைசந்தித்து நிலைமையை விளக்கி மூன்று நாட்களுக்குள் வழமைபோல் சங்கம் இயங்கச்செய்யும்படி கேட்டுக்கொள்வதென்றும் அவ்வாறு செய்விக்க மேலதிகாரிகளால் முடியாதுபோகும் சமயத்தில் பொதுமக்களை நேரடி நடவடிக்கைகளில் இறங்கச் செய்ய வேண்டுமென்றும் அதன் முன்ேடி நடவடிக்கையாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை சங்கானை உதவி அரசாங்கஅதிபர் காரியாலயத்தில் அமைதியானமுறையில் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. (க)

# மாத்தளை தேவஸ்தான மகோற்சவம்

மாத்தளை, வியாழன்

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மகோற்சவத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கழுதாவளை ஸ்ரீ சுடுகந்தை காளியம்மன் கோவிலில் இருந்து பறவைக் காவடி, காவடியாட்டம் ஆகியவற்றை எடுத்துவந்து அடியார்கள் அம்பிகைக்கு காணிக்கை செலுத்துவர்.

காலை 10 மணிக்கு அடியார்களின் தீக்குளிப்பு இடம்பெறும். பகல்11 மணிக்கு அனைவர்க்கும் அன்னதானம் வழங்கப்படும்.

இரவு 10 மணிக்கு பஞ்சமூர்த்திகள் பஞ்சவாகனங்களில் அமர்ந்திருந்து வேட்டைத் திருவிழாவில் பங்கு பற்றுவர்.

4 ம் திகதி வெள்ளிக்கிழமை பஞ்சதேர் உற்சவ பவனி இரவு 11 மணிக்கு நடைபெறும்.

அன்று தேர்த்திருவிழா நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் அஞ்சல் செய்யப்படும்.

6 ம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும், 7 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். மேற்படி மகோற்சவம் கடந்த மாதம் 14 ம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது. (உ)

# கைதடி சைவ அநாதை இல்ல கொடிநாள் விழா

யாழ்ப்பாணம், வியா.

கைதடியில் உள்ள இலங்கை சைவ அநாதை இல்லத்தின் கொடிநாள்விழா இம்மாதம் 10-ம் திகதி காலை9-00மணிக்கு ஆரம்பமாகவிருக்கிறது.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மாஅப்பாக்குட்டி தலைமையில் விழா நடைபெறும். சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல், விஜயபாலாமுதல் கொடியைப்பெறுவார். முற்பகல் நிகழ்ச்சியில் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஜனுப்எம். எம். அப்துல்காதர், யாழ்.வளாகத்தலைவர் கலாநிதி க. கைலாசபதி, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. இ.சிதம்பரப்பிள்ளை ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

பிற்பகல் நடைபெறும்விழாவில் முன்னுள்உப-சபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம், திரு. க. கனகராஜா, திரு. க. மயில்வாகனம் ஆகியோர் பேசுவர்.

நாவலர்கூடத்தை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம்திறந்துவைப்பார். (உ.

# "உற்பத்தி வளத்திற்கு மரங்கள் அவசியம்"

யாழ்ப்பாணம், வியா

"பயன்தரும் மரங்களை நாட்டுவதன்மூலம் நமக்குப் பயனும், நிழலும் கிடைக்கிறது. காடுகளிலே மலரும் மரங்களை மக்கள் கண்டபடி வெட்டி அழிப்பதனல் நாட்டில் மழை குறைவதுடன், வெள்ளஅரிப்பும் ஏற்படுகிறது. மழை குறைவடைவதால் நாட்டில் உற்பத்திவளம் குறைவடைவதுடன் செல்வமும் குறைகிறது".

இவ்வாறு நாவாந்துறை தெற்கு சென்ற் நீக்கிலாஸ் சனசமூகநிலைய வளவில் நடைபெற்ற மரம்நாட்டு விழாவில் யாழ். மாநகர சனசமூக நிலையச் சமாசச் செயலாளர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் திரு. ஏ. தேவராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. ஜீவானந்தம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'மரம்நடும் இயக்கத்தை மிகவும் பரந்தஅளவில் அரசாங்கம் செய்துவருகையில், பயன்தரும் மரங்களை மக்களுக்கு இலவசமாக வழங்கி, இலங்கை முழுவதும் மரம்நடும் இயக்கத்தை மிகவும் விரிந்த அளவில் நடைமுறைப்படுத்திவரும் மில்க்வைற் தொழிலதிபர்சிவநெறிப் புரவலர் திரு. கனகராசாவை இந்நாட்டு மக்கள் என்றும் மறக்க முடியாது. அவர்ஆரம்பித்துவைத்த பனைமரம் நடும் இயக்கத்தினல் இன்று இலங்கை முழுவதும், விசேஷமாக வன்னிப்பகுதியில் பலலட்சக்கணக்கான பனைமரங்கள் முளைத்து வளர்ந்திருப்பதை நாம்காணக் கூடியதாக இருக்கிறது'.

யாழ். மாநகர சனசமூக நிலையச் சமாஜத்தலைவர் திரு. செ. இராசதுரை, செயலாளர் திரு. எஸ். பி. ஜீவானந்தம், யாழ். மாவட்டசனசமூகநிலைய சமாஜப் பொதுச்செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம், பொருளாளர் திரு. கி. துரைசிங்கம், சென்ற் நீக்கிலஸ் சனசமூகநிலையத் தலைவர் திரு. ஏ. தேவராசா ஆகியோரும் இன்னும் பலரும் நிலைய வளவில் பயன்தரும் மரங்களை நாட்டிவைத்தனர். இவ்விழாவில் ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும்ஏராளமானேர் கலந்துகொண்டனர்.

திரு. ஏ. சொலமன் நன்றி தெரிவித்துப்பேசினுர். (அ)

# இளைப்பாறுகிருர்

பண்டத்தரிப்பு, புதன்

அளவெட்டி அரசினர் வைத்தியசாலையில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் ஏ. மாணிக்கம் இம்மாதம் தொடக்கம் தமது பதவியிலிருந்து இளைப்பாறுகிருர்.

இவர் கடந்த 34 வருடங்களாக கொழும்பு, மடுல்சீமை, அளவை, விந்துல, கலகா, பருத்தித்துறை, கண்டி ஆகிய இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றியுள்ளார். (இ)

# நெசவு நிலையம் ஆரம்பிக்கும்

நல்லூர், புதன்

பரந்தன் ஈழத்தமிழர் பொருளாதார அபிவிருத்திச் சங்கம் விரைவில் நெசவு நிலையமொன்றையும் சிறுகைத்தொழில் நிலையம் ஒன்றையும் ஆரம்பிக்கவுள்ளதாகச் சங்க உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# நன்றியும் பாராட்டும்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசமாகப் புத்தகங்கள் வழங்க வரவுசெலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கியமைக்கும், புத்தகங்கள் வழங்கியமைக்கும் யாழ் மாநகராட்சி மன்ற விசேஷ ஆணையாளர் திரு. ஏ. ஏ. யோசேப்புக்கு யாழ். மாநகர சனசமூக நிலைய சமாஜ செயலாளர் நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளார். (அ)

## சிறையில் மாண்ட தி. மு. க. எம். பி.

# 'எனக்காக அழுபவர்கள் வெளியில் தானே இருக்கிறார்கள்'

## சிட்டிபாபுவின் டயறியில் திடுக்கிடும் தகவல்கள்

அவசர காலம் பிரகடனத்தின்கீழ் கைதாகி சிறையில் வைக்கப்பட்டிருந்த சமயம் மரணமான தி. மு. க. எம். பி.யும் அறிஞர் அண்ணாவுடனும் தி. மு.க. கருணாநிதியுடனும் அருகிருந்து பணியாற்றியவருமான திரு. சிட்டிபாபு மரணமாவதற்குமுன் தமது கைப்பட எழுதிவைத்திருந்த டயறியில் இருந்து முக்கிய குறிப்புகள் சிலவற்றை நேற்றைய ஈழநாட்டில் வெளியிட்டிருந்தோம் அல்லவா?

அதன் தொடர்ச்சி இன்று வெளியாகிறது.

''என்சட்டை, தரையில் உருண்டதால் செம்மண் புரண்டு இழுத்த காரணத்தால் கிழிந்தும் போயிருந்தது.

மண்ணைத்தட்டிக்கொண்டே கிழிந்த சட்டையை சரிசெய்தபடியே சொன்னேன். சமாதி வெளியில்தான் என்பதால் சாகடித்துவிடலாம். உயிரோடு சென்றால் ஒரிருமாலைகள் உயிர் அற்றுச் சென்றால் உடம்பெல்லாம் ஓராயிரம் மாலைகள் கிடைக்கும்.

அதற்குள் அலுவலகச் சிப்பந்தி ஒருவன் ஓடிவந்து 'அவரைக்கூப்பிட்டு வரச்சொன்னார் என்றான்.

### வழியில் நடந்ததை சொல்லாதே

'வழியில் நடந்ததை எதுவும் சொல்லக்கூடாது. சொன்னால் வரும்போதும் விழும்' என்றான் முன்குறிப்பிட்டநபர்.

### அழவேண்டியோர் வெளியில்தானே...

'என்பிணம் தானே. பரவாயில்லை. அழவேண்டியவர்கள் எல்லாம் வெளியேதான் இருக்கிறார்கள். உள்ளே யார் இருக்கிறார்கள்—உன்னைத்தவிர என்றேன் சிரித்துக்கொண்டே.

ஆனால் அவனே என்னை அறைக்கதவுவரை அழைத்துக்கொண்டு என்னுடன் வந்தான்.

அப்போது அங்கிருந்து என் தம்பியிருக்கும் இடத்தைப் பார்த்தேன். அவனே என் கண்களில் அகப்படவில்லை.

அனைவரும் டீ குடிக்கும் நேரம் அல்லவா அது.

### அதட்டல் குரல்

அழைப்புக் கிடைத்தது உள்ளே இருந்து. உள்ளே சென்றேன். உட்காரச் சொன்னார்கள். 'பரவாயில்லை' என்று சொல்லிக்கொண்டே தலையை அசைத்தேன்.

உடன்அதட்டல்குரல்: 'I say sit down' உட்கார்ந்தேன்.

'இப்போது எப்படியிருக்கிறது?' நான் நன்றாகத்தான் இருக்கிறேன்.

—உடன் அவர் சொன்னார். 'நீயும் மற்றசிலரும் அரியானா அல்லது மத்தியபிரதேசத்திற்கு மாற்றப்படக்கூடும்.'

அவருடன் சம்பாஷணை ஆங்கிலத்திலேயே நடந்தது. ஆங்கிலத்திலேதான் அவர் பேசினார்.

### 'அரசின் கருத்து'

நான் ஒரு அசட்டுப் புன்னகை செய்தேன் 'இது என்னுடைய கருத்தல்ல. அரசின் கருத்து' என்றார்.

### நாடுமுழுவதும் தமிழ்நாடு போல்தான்

அவர் அப்படிக் கூறியதும் நான், 'அதனால் என்ன. அது உண்மையானால் நான்மகிழ்ச்சி அடைவேன். நான்எம்.பி.யாக இருப்பதால் நாடுமுழுவதும் எனக்குத் தமிழ்நாடுபோலத்தான். அதனால்தான் இந்தியாவெங்கும் பிரயாணம் செய்ய பாஸ் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் எப்போது ஐயா அந்தச் சிறைகளுக்குக் கொண்டு செல்லப்படுவோம்' என்றேன்.

'பதினைந்துநாட்களில்' என்றார் உடன்நான் 'சென்றுவரட்டுமா' என்றேன். உடன்அவர், 'சரி' தேவையானால் பிறகு பார்க்கிறேன்' என்றார். 'நன்றி' என்று கூறிவிட்டு வெளியில் வந்தேன்.

### இதுவரை தெரியாத வலி

அதுவரை உணர்வும், ஆத்திரமும் சேர்ந்து உடலில் இருந்ததால் வலி தெரியவில்லை வெளியில் வந்தவுடன்தான் படிக்கட்டுகள் என் கால்களுக்குப் பஞ்சுமெத்தையில் நடப்பது போன்ற உணர்வை ஊட்டின. கைப்பிடிபோல் உள்ள இடத்தைப் பிடித்துக் கொண்டே கீழேவந்தேன். அழைத்து வந்த கான்விக்டர் அங்கு இல்லை. நான் ஒன்பதாவது பிளாக்குக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

### பிளாக்கில் உள்ளோர் துடிப்பு

பிளாக்கில் உள்ளவர்கள் 'சிட்டிஏன் இன்னும்வரவில்லை' என்று துடித்திருக்கிறார்கள். பாவம்! அவர்கள் பூட்டிய அறைகளில் இருந்ததால் என்னை அழைத்து என்ன என்று கேட்கக்கூட முடியவில்லை.

மீண்டும் அறைக் கதவுகள் என்னை உள்ளே அழைத்துக் கொண்டன.

உள்ளே நீலம் 'என்ன என்ன என்றுபதறினார். பார்வையிலேகை தேர்ந்த நண்பர் சீதாபதி அசைவற்று நிற்று விட்டார்.

### 'சிறை வரவேற்புதான்' என்றேன்

அமைதியாக என் சட்டையைக்கழற்றிவிட்டு உடன்வேறு சட்டையையும், வேட்டியையும் உடுத்துக்கொண்டேன்.

'என்ன'என்று கேட்ட நீலத்திடம் ஒன்றுமில்லை. நம்மில் சிலரை அரியானா அல்லது மத்தியப் பிரதேசத்திற்கு மாற்றப் போவதாகச் சொன்னார். அவ்வளவுதான்' என்றேன்.

அவர் 'அதுஅல்ல சட்டையெல்லாம்...' என்று இழுத்தார்.

'சிறை வரவேற்பு அவ்வளவுதான்' என்றேன்.

அடுத்த சில நிமிடங்களில் கதவு திறக்கப்பட்டது. உணவுக்காக. இரவு நெருங்கிவிட்டதல்லவா அதனால்!

திறந்துவிடப்பட்டதும் அனைவரும் என்னை 'என்ன என்ன' என்று கேட்க ஆரம்பித்தனர்.

திறக்கமாட்டானா என்று எண்ணிக் கொண்டிருந்த உள்ளம் மூடமாட்டானா என்று எண்ணியது. காரணம், அத்தனைகுறுக்குக் கேள்விகள்–பயம் கலந்த பார்வைகளில்!...

### எதிர்காலம் பற்றி புரிந்தது

அண்மைக் காலத்தில் அரசியல் அப்படி வேடிக்கையாக ஆக்கப்பட்டுவிட்டது. எதிர்காலம் எப்படியிருக்கும் என்று அன்று இரவு எனக்கு மிக நன்றாகப்புரிந்துவிட்டது.

'இனிமேல் இவர்கள் நம்மை எங்கே உயிருடன் அனுப்பப் போகிறார்கள்? நாம் தான் குறிவைக்கப்பட்ட நபர்களில் ஒருவராக, குறிப்பிட்ட ஒருவனாக ஆகிவிட்டோமே' என்று எண்ணினேன்.

### எண்ணங்கள் சுழன்றன

உடன் எண்ணங்கள் சுழல ஆரம்பித்தன. எனது இல்லத்தை நோக்கி! என் இதயம் ஏனோ என்னை விட்டு விட்டு வேண்டுமென்றே வாழ்க்கை எண்ணங்களில் சுழல ஆரம்பித்துவிட்டது.

வீட்டில் வாடிய மலர் போல ஒருமுகம்! களையிழந்து நிற்கும் முகம் மற்றொன்று! இரண்டும் தனித்தனிக் கிளைகளில்தான் இருக்கிறது.

அவை வாடி இருக்கும் பறவைகள். அவைகளின் அருகில் இரு குஞ்சுகள், ஒவ்வொரு பறவையிடமும்.

அவைகள் கிளைக்குக் கிளை வாழும் நிலை என்றாலும் இவர்களுக்கு நான்ஒரேமரம்தானே. அவர்களைப் பொறுத்த அளவில்!

அரசியல்காற்று என்பக்கம்–புயல்வேகத்தில்! மரம் ஒருவேளை வேரோடு பிடுங்கி எறியப்பட்டால்...? எண்ணினேன். பலமுறை எண்ணினேன், கிளைகளில் உள்ள பறவைகளை! அங்கு அவைகளின் குஞ்சுகள் அலைமோதும் கூடுகளில் அல்லலுறும் காட்சிகள்.

பாவம்! அவைகள் பறக்கும் இறகு வளராக் குஞ்சுகள் தானே.

ஆயினும் அதைக் காத்திட வேண்டிய அன்றில் பறவைகள் ஆண் துணையின்றி வாழ எப்படி முடியும்?

### அண்ணன் மகன் காப்பானா?

அண்ணன் பெற்ற மகன். அவனுக்குத் தன் வீட்டுப் பொறுப்பும் உண்டு. அப்படியிருக்கையில் நம் வீட்டுப் பொறுப்புக்களை ஏற்பானா? எண்ணச் சுழல்கள் வேகமாகச் சுழல ஆரம்பித்தன.

ஒருகாலத்தில் மரம் முழுவதும் காயும், கனியுமாக இருந்தது. அப்போது அந்தக்காற்று அடித்திருந்தால்கூடகாவல்காரனுக்கு ஓரளவு காசாவது கிடைக்கும். பூவும் பிஞ்சும், கனியும் கனியும் விற்பதன் மூலம். ஆனால் இன்று நானோ காவல்கைதியென்ற பெயரால்...!அதுவும் சாய்ந்தமரம். நான்,காய்த்தமரம் அல்லவே! கல்லடி, சொல்லடிபடும் காய்த்தமரம்.

ஆனால் இங்கே நானே விழப்போகும்காய்த்தமரம். அதனால் அதை விரைவில்வெட்டி வித்தாக்கி – எரிபொருளாக ஆக்கி வாழ்வைச் சாம்பலாக்கிவிடப் போகிறார்கள். அதிகாரத்திற்குச் சர்வாதிகாரம்என்றபெயர் அமைந்துவிட்டபிறகு அழுது என்னபலன்?

கண்ணீரின் இடையில் ஒரு தெளிவு. மனிதன் ஏன்சாவுக்குப் பயப்படுகிறான் என்ற கேள்வி. அதுவா? வாழ்வதில் மகிழ்ச்சி இருக்கிறது என்பதால். அதுதான் எனக்கில்லையே. நான் ஏன் அழவேண்டும்.

### அண்ணாவின் அறிவுரை

'தம்பி! எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள் மட்டுமே என்னுடன் வாருங்கள். வருகிறவனுக்கு என்னால் கொடுக்கமுடியும் என்பது ஆடம்பரவாழ்வல்ல, அவதி, ஆபத்து, அழிவு இவைகள் தான். இதைத் தாங்குபவன் மட்டுமே இப்பெரும் பயணத்திற்கு வரலாம். என்னிடம் வருபவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்டு வருதல் வேண்டும்'என்ற அண்ணாவின் பேச்சு என்மனதில் எதிரொலித்தது.

இடம்விட்டு இடம்மாறுவது என்அகராதியில் என்றுமே இல்லையே. 'இதயமே! எதற்கும் தயாராக இரு' என்றது என்மனம். (உ)

---

## எம்.சி.சி. இலங்கை கிரிக்கட் டெஸ்டில் புதியசாதனை

கொழும்பு, புதன்

இங்கிலாந்துக் கோஷ்டிக்கும் இலங்கைக் கோஷ்டிக்கும் இடையே கொழும்பு சரவணமுத்து ஸ்ரேடியத்தில் நடைபெற்ற நான்கு நாள் உத்தியோகப் பற்றற்ற கிரிக்கெட் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இலங்கைக் கோஷ்டிக் காப்டன் அனுரா தென்னக்கோனும் ஆரம்ப துடுப்படி வீரர் பந்துல வர்ணபுராவும் 2–வது விக்கெட்ஜோடியாக இணைந்து 163 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தினர்.

வெளிநாட்டு கோஷ்டிக்கு எதிராக 2–வது விக்கெட் ஜோடி எடுத்த ஆகக் கூடுதலான ஓட்டம் இதுவே ஆகும்.

இங்கிலாந்தை வெற்றிபெற 309 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த இலங்கைக் கோஷ்டி இந்த இருவரினதும் அபாரமான துடுப்பாட்டம் காரணமாக ஆட்ட முடிவில் 6 விக்கெட் நஷ்டத்திற்கு 210 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. வெளிச்சம் போதாமையால் ஆட்டம் சுமார் அரைமணித்தியாலம் முன்னதாகவே நிறுத்தப்பட்டது. இலங்கைக் கோஷ்டி தேநீர் இடைவேளையின் போது ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 129 ஓட்டங்களை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

புதிய சாதனையை நிலைநாட்டிய ஜோடிகளான அனுரா தென்னக்கோன் 97 ஓட்டங்களுடனும், வர்ணபுரா 69 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

முதலாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து வீரர்களான பார்லோ 118 ஓட்டங்களையும் காப்டன் கிரேக் ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களையும் இலங்கைவீரர் வர்ணபுரா 34 ஓட்டங்களையும் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்கோர் விபரம்: இங்கிலாந்து 360–6,99–3; இலங்கை 151, 210–6. (இ)

---

## ஜெயப்பிரகாஷ் உடல் நிலையில் முன்னேற்றம்

பம்பாய், மார்ச் 2

பம்பாய் ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சைபெற்றுவரும் ஜெயப்பிரகாஷ் நாராயணின் உடல்நிலை தேறிவருவதாக பம்பாயிலிருந்துவெளியான வைத்திய அறிக்கைகள்கூறுகின்றன.

தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது திடீர்சுகயீனமுற்ற ஜெயப்பிரகாஷ் நாராயண், தமது நிகழ்ச்சிகளை ரத்துச்செய்துவிட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது தெரிந்ததே. (ஆ)

---

## வட்டு. கி. ச. உப தலைவர்

யாழ்ப்பாணம், வியா

வட்டுக்கோட்டைத்தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம அமைப்பாளர் திரு. நா. இரத்தினசிங்கம் வட்டுக்கோட்டை ஊராட்சி மன்ற உப தலைவராக மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

4 ம் வட்டார உறுப்பினரான இவர் 69 ம் ஆண்டும் இம் மன்றத்தின் உபதலைவராகக் கடமையாற்றினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மன்ற மாதாந்தக் கூட்டத்திலேயே இத்தெரிவு இடம் பெற்றது. (இ)

......

## விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

நீர்கொழும்பு, புதன்

கட்டாவலை கொலை முயற்சி வழக்கில் விசாரணை நடுவில் எதிரிகள் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதவான் திரு. எச். ஏ. ஜி. டி. சில்வா முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் கட்டாவலையில் மைக்கல் பீரிஸ் என்பவரைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும், கே. ஏ. சிறிசேன, எச். டி. ஜெசிநோனா ஆகியோருக்குக் காயம் விளைவித்ததாகவும், பி. வி. டி வீரசிங்கா, குணரத்ன பெரேரா, டபிள்யூ. சி. பெரேரா ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1 ம் எதிரி சார்பில் சட்டத்தரணி தயா பெரேரா, சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) ஆகியோரும், 2 ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் ஜூனியரும், 3 ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செல்வி இந்திரா பெர்னாண்டோவும் ஆஜரானார்கள்.

ஜூரிசபையினர், விசாரணை நடுவில் வழக்கைத் தொடர விரும்பவில்லையென கூறியதைத் தொடர்ந்து எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். (க-அ)

---

கச்சதீவு உற்சவம்:

## காலரா, அம்மைநோய் தடுப்பு நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியா.

கச்சதீவு செல்லவிருக்கும் யாத்திரிகர்களுக்கு, குருநகர் அரசினர் மருத்துவமனையில் நேற்று அம்மைப்பால் கட்டப்பட்டதுடன் கலரா தடுப்பு ஊசியும் ஏற்றப்பட்டது.

இம்மாதம் 8–ந் தேதிவரை தொடர்ந்து இங்கு அம்மைப்பால் கட்டவும்,கலாரா தடுப்பு ஊசி ஏற்றவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வழமைபோல் நல்லூர் செட்டித்தெருவிலுள்ள வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்திலும் தடுப்பு மருந்துகள் கொடுத்து சான்றிதழ் வழங்கப்படும்.

கடைசிநேர நெருக்கடிகளைத் தவிர்த்து நேரகாலத்துடன் சான்றிதழ்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவிடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமையும் தடைமருந்து கொடுக்கப்படமாட்டாது. (க-ஆ)

# தாக்குதலில் பெண்ணும் வயோதிபரும் படுகாயம்

மாவிட்டபுரம், புதன்
வசாவிளானில் நிகழ்ந்த தாக்குதல் சம்பவத்தில் பெண் ஒருவரும், வயோதிபர் ஒருவரும் பலத்த காயமடைந்தனர்.

வசாவிளானைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை லில்லிமலர் (42 வயது), தேவசகாயம் தொம்மை (76 வயது) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

அதேயிடத்தைச் சேர்ந்த வேறு சிலருக்கும் இவர்களுக்குமிடையில் ஏற்பட்ட இத்தாக்குதலில் கற்களும், பொல்லுகளும் பாவிக்கப்பட்டனவாம்.

இது சம்பந்தமாகத் தேடப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவரான மிக்கேல் நேசராசா என்பவர் பொலிசில் சரணடைந்ததையடுத்து, மல்லாகம் நீதிபதியின் உத்தரவைத் தொடர்ந்து அவர் றிமாண்டில் வைக்கப்பட்டார். மற்றும் சிலர் தேடப்படுகின்றனர். (அ)


**RIO** (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45.
GRAND RELEASE
[GO FOR A LAUGH]
Reg Varney in
**DOUBLE TAKE**

**Regal** (Jaffna) Daily 4-45, 7-00 & 9-30 P. M.
How Powerful or False is The Occult? A Question Asked Time and Again is put to Test in this Suspenseful Film. The First of Superstar Leonard Nimoy to Come to Sri Lanka.
LEONARD NIMOY SUSAN HAMPSHIRE
in
**BAFFLED!**
(Color)

**ராணி** [யாழ்நகர்] கமலஹாசன் — தீபா - சாவித்திரி நடித்த
தினசரி 4 காட்சிகள்
**அந்தரங்கம்**

**வின்ஸர்** [யாழ். நகர்] கமலஹாசன் - ஸ்ரீவித்யா சுந்தரராஜன் ஜெயசுதா நடித்த
தினசரி 4 காட்சிகள்
**அபூர்வ ராகங்கள்**

**மனோகரா** 5-வது வெற்றி வாரம்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ராதாசலூஜா
நிர்மலா
வீரப்பா
நடித்த
சத்யா மூவிஸ்
**இதயக்கனி**
[ஈஸ்மன் கலர்]





**வெலிங்டன்** [யாழ். நகர்] எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**பணக்காரக் குடும்பம்**

**லிடோ** போன்: 7693 சிவகுமார் — ஜெய்சித்ரா நடித்த
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
**வெள்ளிக்கிழமை விரதம்**
(புதிய பிரதி)

**ராஜா** கடைசி 2 தினங்கள்
[யாழ். நகர்] ஜெய்சங்கர் - நிர்மலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
**தாய்க்கு ஒரு பிள்ளை**
6-3-77 முதல்
**கோமாதா என் குலமாதா**
(புதிய பிரதி)


## கிளிநொச்சியில்

# கட்டடப் பொருள் கூ.ஸ்தாபனக் கிளை நிறுவப்படுமாம்

கிளிநொச்சி, புதன்
கட்டடப் பொருட்கள் கூட்டுத் தாபனக் கிளை ஒன்று கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட உள்ளதாம்.

கட்டட நிர்மாணத்துறை அமைச்சரும், தபாற்தந்தித் தொடர்புகள் அமைச்சருமான திரு. செல்லையா குமாரசூரியரின் நடவடிக்கையால் வெகு விரைவில் இக்கிளை கிளிநொச்சிப் பட்டணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகச் சம்பந்தப்பட்ட ஒருவர் நமது திருபரிடம் தெரிவித்தார். (அ)


**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
**தனிப்பிறவி**

**வெஸ்லி** [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவகுமார்-ஜெய்சித்ரா
**தேன்சிந்துதே வானம்**

**நாகம்ஸ்** [சுன்னுகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
**ஆலயமணி**

பல வெற்றிப்படங்களை அடுத்தடுத்து திரையிட்ட ஸ்ரீதர் சினிமா ஸ்தாபனத்தார் மற்றுமொரு வெற்றிச் சித்திரத்தை திரையிடுகிறார்கள்.
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்!
★ பாட்டும் பரதமும் மோதிக்கொள்ளும் பண்புமிகு சித்திரம்!





**யாழ். ஸ்ரீதரில்...**
இன்று 3-3-77 முதல்
தினசரி 4 காட்சிகள்

கதையில் - கருத்தில் கன்னித்தமிழ் உரையாடலில்
இசையில் - பாடல் ஆடல்களில்
வசூலில் வாகைசூடிய படம்.

★ நடிகர்திலகம் சிவாஜிகணேசன் (இருவேடங்களில்)
ஜெயலலிதா ★ விஜயகுமார்
★ கோபிகிருஷ்ண ★ மனோகர்
★ சுந்தரராஜன் ★ மனோரமா
வாசு — சுகுமாரி — ஸ்ரீப்ரியா—ஸ்ரீலட்சுமி— விஜயசந்திரிகா
மற்றும் பலர் நடிக்கும்
**பாட்டும் பரதமும்**
(ஈஸ்ட்மன்கலர்)




**ஈழநாடு சந்தா**
(தபால் மூலம் விநியோகம்)
(தினசரி – வாரமலர் உட்பட)

3 மாதம் ரூ. 47-00
6 மாதம் ரூ. 94-00
1 வருடம் ரூ. 188-00

# ஈழநாடு
The EELANADU

**ஈழநாடு சந்தா**
(ஆள் மூலம் விநியோகம்)
(யாழ்- மாநகரசபை எல்லைக்குள்)
(தினசரி- வாரமலர் உட்பட)

3 மாதம் ரூ. 37-50
6 மாதம் ரூ. 75-00
1 வருடம் ரூ. 150-00


# சிறியமோல்டாதீவு தனியாக வாழமுடிந்தால் நமக்கு ஏன்முடியாது?

## காசிஆனந்தன் கேட்கிறார்

வவுணதீவு, புதன்

''நூற்று இருபது சதுர மைல்கள் கொண்ட மோல்டா உலகில் தனிநாடாக வாழ முடியுமானால் ஏழாயிரம் சதுர மைல் கொண்ட மோல்டா, உலகில் தனிநாடாக வாழ முடியுமானால் ஏழாயிரம் சதுர மைல் கொண்ட தமிழ்ஈழம் ஏன் தனிநாடாகக் கூடாது''

இவ்வாறு சிறையிலிருந்து விடுதலைசெய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்களில் ஒருவரும் தமிழ்இளைஞர்பேரவைஅமைப்புத் தலைவர்களில் ஒருவருமான கவிஞர் காசிஆனந்தன், மட்டக்களப்புத் தமிழ்இளைஞர் பேரவையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தவரவேற்புப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகையில் கேட்டார்.

இக் கூட்டத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் குத்துவிளக் கேற்றி ஆரம்பித்துவைக்க மட்டுநகர் த. இ. பேரவைத் தலைவர் திரு. பொன் வேணுதாஸ் தலைமைதாங்கினார்.

கவிஞர் காசிஆனந்தன் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

''முழு இலங்கைக்கும் சொந்தக்காரர்களாகி ஒருகாலத்தில் இந்த நாட்டை ஆட்சிபுரிந்த தமிழினம், ஒற்றுமையின்மையால் பலமிழந்து அந்நியர்களின் அடிமைகளாக்கப்பட்டு விட்டோம். வடக்கு, கிழக்கு என்ற பிரதேச பாகுபாடுகளை ஒழித்துக்கட்டி மொழி அடிப்படையில் ஏற்பட்டுள்ள தமிழினம் பேச்சுவார்த்தை மூலமாகத் தனது உரிமையைப் பெறமுடியாது. தனிநாடு ஒன்றைத் தமிழர்கள் அமைப்பதன் மூலமாகவே தமிழர்கள் உலகின் ஏனைய இனங்களைப் போன்று தனித்துவத்துடன் வாழலிடியும்.

### செவல்ா தலைமையில் சத்தியப் போராட்டம்

தமிழ் இளைஞர்கள் தந்தை செல்வா தலைமையில் ஒரு சத்தியப் போராட்டத்தை நடாத்திவருகிறார்கள். தமிழர்களின் இந்த சத்தியப்போராட்டத்தைத் தடுத்துநிறுத்துவதற்காகச் சிங்கள அதிகாரிகள் தமிழ்ப்பகுதிகளில் குவிக்கப்படுகிறார்கள். குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள அரசாங்கஅதிபர்களும், பொலிஸ் உயர்அதிகாரிகளும் சேவைக்கு ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்தப் பகுதிகளில் கடமையாற்றுவதற்கு தமிழ் பேசும் அதிகாரிகள் இந் நாட்டில் இல்லையா? இதிலிருந்து சிங்கள இனம் தமிழர்களை நம்புவதில்லையென்றும் உண்மை புலனாகின்றது. பேச்சுவார்த்தை மூலம் தமிழினத்துக்குச் சுபீட்சம் காணலாம் எனக் கூறுகிறார்கள். தமிழர்களைச் சிங்களவர்கள் நம்பாத நிலையில் பேச்சுவார்த்தை அவசியமில்லை. எந்தவகையிலும் தனிநாடு ஒன்றை அமைப்பதே தமிழன் வாழ ஒரேயொரு வழியாகும்''

சில தினங்களுக்கு முன் மட்டக்களப்புக்கெனத் தனிக் கட்சி வேண்டும் என்ற தலைப்பில் வெளியான கண்டுப்பிரசுரத்துக்குப் பதிலளித்துக் கவிஞர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

### பிரிவினைப் பிரசுரம்

''மட்டக்களப்பை யாழ்ப்பாணத்தான் புறக்கணிக்கிறான் என்றும் அரசாங்க அமைச்சர்களைப் பிடித்து அங்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெறுவதாகவும் பிரசுரத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் வேலைவாய்ப்புக்கென வாழைச்சேனையில் காகித ஆலையைக் கட்டித் தந்தவர் யாழ்ப்பாணத்தவரான அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமாவார். மட்டக்களப்பு மைதானத்தில் திறந்தவெளிஅரங்கைக்கட்டித்தந்தவர் யாழ்ப்பாணத்து வர்த்தகரான திரு. சின்னத்துரை ஆவர்.

''பாலங்களும், கட்டடங்களும் கட்டுவதால் தமிழினத்தின் விடுதலையைக் கட்டுப்படுத்தமுடியாது. எனவே ஒன்றுபட்டுள்ள தமிழினம் புனிதபோராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறது. திரு. இராஜன் செல்வநாயகம் எம். பி. எனது கல்லூரி நண்பர். எனவே 'ஒற்றுமையைக் குழப்ப நினைக்க வேண்டாம்' என் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தமிழின விடுதலைக்கு அவரால்ஏதாவது செய்ய முடியாவிட்டால் அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### இரத்ததிலகம்

கவிஞர் பேச எழுந்ததும் நூற்றுக்கணக்கான மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டதுடன் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் இரத்தத் திலகமிட்டனர்.

கவிஞரின் சகோதரர்களுடன், அவரது தாயார் திருமதி அழகம்மை காத்தமுத்துவும் மேடையில் காணப்பட்டார். இக்கூட்டத்தில்பருத்தித்துறை த. இ. பேரவை திரு. சிவகிருஷ்ணபிள்ளை, மட்டக்களப்பு த. இ. பேரவையைச் சேர்ந்த திரு. கா. அன்ரன், தமிழர் விடுதலைக் கூட்டணி கல்குடாத் தொகுதிப்பிரமுகர் திரு. கோவிந்தசாமி, வண. ஜோசப் மேரி அடிகள் உட்படப்பலர் உரையாற்றினர்.

மட்டக்களப்பு த. வி. கூட்டணிப் பிரமுகரான திரு. வ. பாலசிங்கம் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இவ் வைபவத்தையொட்டி உதயசூரியன் கொடிகளால் பாட்டாளிபுர மைதானம் (இராஜன் அரங்கு) அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுமார் 10 ஆயிரம் பேரளவில் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். சனக்கூட்டம் காரணமாக மேற்படி வீதியினால் வாகனப் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தது. (அ)

## சிப்பாய்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்திலிருந்து கீரிமலை நோக்கிப் புறப்பட்ட பஸ் ஒன்றை ராணித் தியேட்டருக்கு முன்பாக வைத்து சிலர் தடுத்து நிறுத்தியதாகவும் பஸ் நிறுத்தப்படுவதற்கு ஏற்பட்ட தாமதம் காரணமாக ஆத்திரம் கொண்ட இக்கோஷ்டியில் ஒருவர் பஸ்ஸினுள் பாய்ந்து ஏறி சாரதியின் கழுத்தை நெரிக்க முயன்றதாகவும் அப்போது பிரயாணிகள் இதில் [illegible] தலையிட்டதாகவும், இதன் எதிரொலியாகவே நடுநிசியில் ட்ரக்கில் வந்ததாகக் கூறப்படும் இக்கோஷ்டி இவ்வித தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

ஒன்பது மணியளவில்நடைபெற்ற சம்பவம் தொடர்பாக: சாரதிஉடனடியாக பஸ்ஸை திருப்பி பஸ் நிலையத்திற்கு கொண்டுவந்து பஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு புகார் செய்ததைத்தொடர்ந்து அவர் இ. போ. ச. யாழ். டிப்போ அதிகாரிக்கும், பொலிசாருக்கும் தகவல் தெரிவித்தார். பொலிஸாரும் இ. போ. ச. டிப்போ அதிகாரியும், பஸ் நிலையத்திற்கு வந்து விசாரணையை மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தின்பின் காயமடைந்த மகேந்திர டீ சில்வா என்பவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் காயமடைந்ததாகக் கூறப்படும் மற்றும் மூவர் சிகிச்சை பெற்றுச்சென்றனர்.

ட்ரக்கில் வந்த கோஷ்டியால் வழியில் வைத்துத் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் மணியம், சங்கரலிங்கம், தவயோகராஜா, செல்வரத்தினம், மதுநாயகம், இரத்தினம் என்னும் அறுவர் யாழ். பெரியாஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### 5 டாக்சிகள் சேதம்

சேதப்படுத்தப்பட்ட 5 டாக்சிகள் யாழ்ப்பாணப் பொலிஸ்நிலையத்தில் பொலிஸாரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பொலிஸார் இச்சம்பவங்கள் தொடர்பாகத் தீவிர புலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை நேற்றுக் காலை சம்பவம் நடந்த இடங்களைப் பார்வையிட்டார் சம்பவம் நடந்த இடங்களில் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது. (ஆ)

## நல்லூர் ப. நோ. கூ. ச. ஊழியர் வேலைநிறுத்தம்

### பணியாளர் தாக்கப்பட்டதின் எதிரொலி

யாழ்ப்பாணம், வியா

நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தைச்சேர்ந்த சகல ஊழியர்களும் கடந்த இரண்டு நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

சங்க தலைமை காரியாலய கட்டடத்தில் உள்ள ஜவுளி விநியோகம் நடந்த போது பாவனையாளர் ஒருவர் பணியாளர் ஒருவரை தாக்கியதை தொடர்ந்து சகல ஊழியரும் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். (உ–ஆ)

## அடையாள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்டு யாழ் ராணி தியேட்டர் முன்பாக சென்று கொண்டிருந்தபோது பஸ்ஸில் இனந்தெரியாத நால்வர் கொண்ட கோஷ்டி ஒன்று ஏறியதாகவும் அக் கோஷ்டியால் பஸ் சாரதி செ. மகாலிங்கம் என்பவரும் கண்டக்டர் சண்முகநாதன் என்பவரும் தாக்கப்பட்டதையடுத்து அவர்கள் பொலிசில் புகார் செய்ததாகவும் பொலிஸ்தரப்பில் நீதவானிடம் தெரிவிக்கப்பட்டது.

அடையாள அணிவகுப்பில் பிரஸ்தாபசந்தேகநபர்கள் மூவர் உட்பட 34 பேர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

பொலிஸ்சார்ஜன்ட்அந்தோனிப்பிள்ளை அடையாளஅணிவகுப்பை ஏற்பாடுசெய்திருந்தார்.

மேற்படி பஸ் சாரதி மகாலிங்கம் சந்தேகநபர்களில் ஒருவரான கே. ஜே. அபயசிங்கா என்ற சிப்பாயை அடையாளம்காட்டினார்.

கண்டக்டர் சந்தேகநபர்களை அடையாளம் காட்டத் தவறிவிட்டார்.

அணிவகுப்பைப் பார்வையிடும்பொருட்டு பலாலி இராணுவமுகாமைச் சேர்ந்த மேஜர் வீரசூரியா நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்.

சந்தேகநபர்கள் மூவரையும் அவரது பொறுப்பில் சரீரப்பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் மீண்டும் இம்மாதம் 21-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (உ)

## மட்டுவிலில் பரபரப்பு

மட்டுவில், வியா

சுருட்டுத் தொழிலாளி ஒருவரை, பட்டப்பகலில் ஒரு கோஷ்டியினர் பலாத்காரமாக மோட்டார் கார் ஒன்றில்கடத்திச் சென்றனராம்.

இப் பரபரப்பூட்டும்சம்பவம் மட்டுவில் வேரற்கேணி கந்தசாமி கோவிலடியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில்நடைபெற்றது. சுமார் 30வயதுடைய பரமலிங்கம் என்ற இத்தொழிலாளியே கடத்தப்பட்டவராவார்.

மட்டுவில் தெற்கு வேரற்கேணிக்கந்தசாமி கோவிலடியிலுள்ள ஒரு சுருட்டுத் தொழிற்சாலையில், சுருட்டுத்தொழிலில் ஈடுபட்டிருந்த சமயமே இப்பரபரப்பூட்டும் சம்பவம் நடைபெற்றது.

## அரியாலை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் குறித்து பதில் நீதவான் திரு. எஸ். அமிர்தலிங்கம் விசாரணைநடாத்தினார்.

இச்சம்பவம் தொடர்பாக கே. மனோகரன் என்பவரைப் பொலிசார் தேடுகின்றனர். கொலைசெய்யப்பட்டவர் தேடப்பட்டு வருபவரின் தமைக்கையாரின் கணவர் என்று விசாரணையில் தெரியவந்தது. பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டு தீர்ப்பு வழங்குவதுஒத்தி வைக்கப்பட்டது. (உ–ஆ)

## மயக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலரினால் பலமாக தாக்கப்பட்டதாக இச்சம்பவம் பற்றி கூறப்படுகிறது. இருவரும் மயக்கமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சையளிக்கப்பட்டது.

உடலில் பலத்த காயமடைந்த மாணவர் மயக்கம் தெளியாத நிலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்கள், (க–ஆ)


## மரண அறிவித்தல்

### கதிரேசர் வேலாயுதர்

சுழிபுரம் மலாயன் பென்சனரும் கோர்ட்டு பிரகஸ்தரும், ஆலய சுப்பிரிண்டனுமான திரு. கதிரேசர் வேலாயுதர் காலமானார். இவர் கண்மணியின் அன்புக் கணவரும், திருமதி நாகேஸ்வரி பரநிருபசிங்கம், சபாரத்தினம் (இரசாயனக் கூட்டுத்தாபனம், பரந்தன்), இரத்தினசபாபதி (வேலைத்தள உத்தியோகத்தர், சிலோன் என்ஜினியர்ஸ் இராணுவமுகாம், பனாகொடை), திருமதி இராசம்மா இராமலிங்கம் ஆகியோரின் அன்புத்தந்தையும், இ. பரநிருபசிங்கம் (ஓய்வு பெற்ற கூட்டுறவு பரிசோதகர்), திருமதி செ. சபாரத்தினம், திருமதி மு. இரத்தினசபாபதி, சு. இராமலிங்கம் (கட்டிட மேற்பார்வையாளர், கட்டிடத் திணைக்களம், கலுபோவில) ஆகியோரின் மாமனாரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (3-3-77) பிற்பகல் 4 மணியளவில் சுழிபுரம் திருவடி நிலை மயானத்தில் நடைபெறும்- 5605



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P O. Box 49, Jaffna Telegram: Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in Sri lanka.